


பாலகுமாரன்
காதற்கிளிகள்

# காதற் கிளிகள்

## 1

அதிகாலை தூக்கத்தைப் போல ஆனந்தமான விஷயம் உலகத்தில் எதுவுமேயில்லை என்று பத்மநாபனுக்கு தோன்றியது. விடிந்து வெகு நேரமாயிருக்கும் என்று தெரிந்தாலும் விழித்துக் கொள்ள மனசு மறுத்தது.

ஆனால் உண்மையில் அன்று காலை நாலே காலுக்கே விழித்துக் கொண்டாயிற்று. கட்டிலிலிருந்து அப்படியே புரண்டு சின்ன தடுமாற்றத்துடன் முக்கால் விழிப்பும், கால் தூக்கமுமாய் எழுந்து சோம்பல் முறித்து விளக்கு போட்டு மணி பார்த்தபோது அடிவயிறு கனத்து கொண்டிருப்பது தெரிந்தது. பாத்ரூம் நோக்கி நடந்து சிலீரென்று உள்ளங்காலில் ஈரம் தாக்க, அவசரமாய் சிறுநீர் கழித்து, காலை கழுவிவிட்டு படுக்கை அறைக்கு வர உடம்பில் உள்ள உஷ்ணம் வெளியேறியதாலும், சிலீரென்று தண்ணீர் தாக்கியதாலும் நடுங்குகின்ற குளிர் ஏற்பட்டு, ஓடிப்போய் படுக்கையில் சுருண்டு கொள்ளத் தோன்றும் போர்வையை தலை வரையில் போர்த்திக் கொள்ளத் தோன்றும் என்ன செய்தாலும் ஒரு இரண்டு நிமிடங்கள் உஷ்ணம் ஏறும் வரை உடம்பு உதறி போட்டு விடும்.

இன்று காலையிலும் அப்படித்தான் நடந்தது. வெளியே கார்த்திகை மாசத்து குளிர் இறங்கி திறந்த ஜன்னல் வழியே அறை முழுவதும் பரவி அடர்த்தியாய் ஆட்சி செய்து கொண்டிருந்தது. காலில் தண்ணீர் ஊற்றியதும் உதடுகள் உதறின. பற்கள் கிட்டின, வினோதமான ஒரு சப்தத்தோடு பாத்ரூமை விட்டு பத்மநாபன் ஓடி வந்தான்.

குளிரில் எல்லோரும் குழந்தைகளாகி விடுகிறார்கள். இப்படி ஒரு வினோத சத்தம் குழந்தைகள் தான் போடும். ரயில் வண்டி போவதைப் போன்ற ஒரு சத்தத்தை கல்யாணமாகி மூணு வயது பிள்ளைக்கு அப்பனானவன் போட முடியாது.

ஆனால் குளிர் கூவ வைத்தது. உடம்பை குறுக்கி கொண்டு பத்மநாபன் படுக்கையை நோக்கி ஓடி வந்தான். மனைவியைத் தாண்டி மெத்தென்று படுக்கையில் விழுந்தாள். குளிர் உடம்மைக் குடைந்தது. கால்களில் உள்ள ஈரம் நாயைப் போல கவ்வி வேதனையைக் கொடுத்தது. மறுபடியும் உட்ம்பைக் குறுக்கி வினோதமாக சத்தமிட்டு போர்வையைத் தேடினான். போர்த்திக் கொண்டால்தான் வாழ்க்கைக்கே அர்த்தம் ஏற்படும் என்பதான ஒரு வேகம் வந்தது.

போர்வை இல்வாவிட்டால் நிலை குலைந்து போய் விடுவோம் என்று ஒரு அவசரம் ஏற்பட்டது. சற்று முன் உதறிவிட்டுப் போன அந்தப் போர்வை அந்த அரையிருட்டில் காணக் கிடைக்கவில்லை. கட்டிலுக்கு இடப்பக்கம் வலப்பக்கம் தேடி சட்டென்று அதை அனிதா போர்த்திக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

''ஏய் காண்டாமிருகம் உனக்குத்தான் ஒரு போர்வை இருக்குல்ல. அப்புறம் ஏன் என் போர்வையை எடுக்கிற.''



லேசான கோபத்தோடு அவன் மனைவி அனிதா போர்த்தியிருந்த போர்வையை விலக்கினான். அனிதாவின் நைட்டி நெஞ்சிலிருந்து தொப்புள் வரை விலகிக் கிடந்தது. வெள்ளை வெளேரென்று தேகம் தெரிந்தது.

''கடவுளே ஏன் இப்படி தொந்தரவு பண்றீங்க. அனிதா அவனுக்காக புரண்டாள்.

அவள் உடம்பு வாசனை பத்மநாபனின் முதுகைத் துளைத்தது.

நான் என்ன தொந்தரவு பண்றேன் என் போர்வையை எடுத்து நீ போர்திண்டு இருக்கே. யப்பா...குளிரு கொல்லுது.''

''கடவுளே எனக்கும் போத்திவுடுங்க'' அனிதா கைகளை தொடை இடுக்கில் வைத்துக் கொண்டு சுருண்டாள்.

திரட்சியான அவள் அங்கங்கள் இந்த செயலில் திமிறித் தெரிந்தன. பலமுறைப் பார்த்து அனுபவித்த உடம்பு தான் என்றாலும் குளிருக்கு மனைவியை கட்டிக்கொள்ளும் ஆசை அந்த க்ஷணம் எழுந்தது. பத்மநாபன் போர்வையை உதறி தனக்கும், அவளுக்குமாக போர்த்திக் கொண்டான்.

ஆனால் மனைவியை கட்டிக் கொள்வதோடு காமம் முடியாது. குளிர் குறைந்து விட்டது என்று உடம்பு பிரியாது. அது ரௌத்திரம் காட்டிவிட்டுத்தான் முடியும். மெல்ல மெல்ல நகர்ந்து முழு மயக்கத்தில் ஈடுபட்டு உடம்பு சோர்ந்து போகும் வரை நிறுத்தாமல் தவிக்கும்.

கூடல் சந்தோஷப் தான். ஆனால் அதற்கு பிறகு தான் பிரச்சினை இருக்கிறது. அதற்கு பிறகு எழுந்திருக்க முடியாது. ஆறு மணிக்கு எழுந்து பல் தேய்க்க வேண்டும் என்ற மனசின் கட்டளை ஒப்பேராது. எட்டு

மணிக்கு உடுத்திக் கொண்டு பல பேருக்கு போன் செய்ய வேண்டும் என்பது நடைபெறாது, விடிகாலையில் அடித்த கும்மாளத்தால் அந்த நாள் முழுவதுமே புலம்பலாகப் போய்விடும். வெறுமே சற்றுநேரம் கட்டிக் கொண்டு படுத்திருந்து விடலாமா போர்வையிலிருந்து கைநீட்டி பத்மநாபன் விளக்கை அணைத்தான். அரைத் தூக்கத்திலிருந்த அனிதா புருஷனின் உடம்பு பட சற்று நகர்ந்து அவனை அணைத்துக் கொண்டாள். பத்மநாபன் அவளை அணைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

இருட்டும், குளிரும் காமத்தின் இரண்டு குதிரைகள். மெத்தென்ற படுக்கைதான் சக்கரம் பொருத்திய தேர். பேச்சுதான் சவுக்கு. உடலில் பரவும் உஷ்ணம்தான் தேர் பாகன். மனம்தான் நீண்ட நெடும்பாதை.

உஷ்ணமென்கிற பாகன் பாவுக்கு சொடுக்கினான்.

''என்னாடி கண்ணு'' என்று பத்மநாபன் கொஞ்சினான்.

''எதுக்கு தொந்தரவு பண்ணுற.'' அனிதா படிக்காதவள் போல் பேசி பின்னிக் கொண்டாள் .

''தேர்ப்பாகன் மறுபடியும் சவுக்கு சொடுக்கினான்.

''நான் தொந்தரவு பண்ணாத வேற எவனடி உன்னை தொந்தரவு பண்ண முடியும்.''

''அதுக்கு ஒரு நேரம் காலம் கிடையாதா.''

தனக்கு வேண்டுமென்ற போது தளருகின்ற விதிகளை மறந்துவிட்டு இது கொஞ்சம்கூட தேவையில்லாத விஷயம் என்பதாய் சிணுங்கினாள்.

''ஏன் இது சரியான டைம் இல்லியா. பகல்ல சாப்பாட்டுக்கு அப்புறம் வைச்சுக்கலாம்றியா. நான் உன் புருஷன்டி. நான் எப்ப கூட்டாலும் வரணும்.''



''தூத்தேறி.''

''எதுக்கு தூத்தேறி.''

''எதுக்கு அசிங்கம், அசிங்கமா பேசறீங்க.''

''நான் என்ன அசிங்கம் பேசினேன்.''

''இப்ப என்னமோ சொன்னீங்களே அது அசிங்கமில்லையா.''

''கொன்னா பாவம் தின்னா போச்சு.''

''ஐயோ கடவுளே.''

''ஏன் உங்களுக்கு இப்படி செய்யறதெல்லாம் புடிக்காதா. நீங்க புள்ளை எப்படி பெத்தீங்க சூரியனைப்பாத்து படுத்துக்கிட்டீங்களா. குந்திதேவி மாதிரி சூரிய பகவான் மொள்ள உள்ள இறங்கி கரு கொடுத்துட்டாரா. புருஷனைத் தவிர வேற எவன் தொட்டாலும் உங்களுக்கு கிக்குதான்.

''ஐய்யாவ்...''

''ஐய்யாவுன்னு ஒருத்தன் இருக்கானா. எங்க இருக்கான். கண்டவனோட படுத்து புரண்டுட்டு புருஷன் கூப்பிட்டா முடியலைன்னுவீங்களா.''

''தயவு செய்து பேசாதீங்க. எதாவது செய்றதாயிருந்தா செய்துட்டு போங்க. அவள் ஒரு விலகலுடன் மல்லாந்து கொண்டாள். கையைத் தலைக்கு மேல் போட்டுக் கொண்டாள்.''

இந்த ஒரு படுக்கை நிலைக்கு எப்போது மனைவி வருகிறாளோ அப்போதெல்லாம் மிகுந்த தேவையில் மனைவி இருக்கிறாள் என்பதை பத்மநாபன் உணர்ந்திருந்தான்.

இன்னும் வம்பு செய் என்பதான அழைப்புதான் அந்த மல்லாந்து படுத்தல் என்பதை தெரிந்து வைத்திருந்தான் மனைவியை நெருக்கி இறுக்கிக் கொண்டான் கன்னங்களில் முத்தமிட்டான். அவனது முழங்கை மடிப்பில் அவளது மார்புகள் கனத்து திமிறின.

அவளது உதடுகளை வருடிக் கொடுக்க அவள் உணர்ச்சி மயமானது தெரிந்தது.

''போடா முரட்டு தடியா என்னிக்காவது நிம்மதியா தூங்க விட்டிருக்கியா.''

''நிம்மதியா, தூங்கறதுக்கா கல்யாணம் பண்ணி கிட்டே. பகல் முழுக்க முழுக்க கெக்கெக்கேன்னு எங்க யாவது போய் பேச வேண்டியது. ராத்திரி முழுக்க தூங்க வேண்டியது. ஒன்றரை மணிநேரம் டெலிபோன்ல எவன் கூடடி பேசுற.''

''அநியாயமா பேசாதீங்க. நான் எங்கம்மாவோட பேசிண்டிருந்தேன்.''

மனைவி பதிவிரதை என்று மிகத் தெளிவாய் தெரிந்தி ருந்தும் அவள் நேசத்தை முழுமையாய் அனுபவித்துக் கொண்டு அவளை பதிவிரதை இல்லையென்று பொய் யாய் கடிந்து கொள்வது ஒரு சுகம். அவளை இழித்தும், பழித்தும் சொல்வது ஒரு சந்தோஷம். ஒரு விதமான போதை மிக்க காமநாடகம். மனைவிக்கும் இந்த நாடகம் தெரியும். இந்த குறை கூறல் அவளுக்கும் பிடிக்கும்,

இந்தப் பொய்யை உண்மையாய் எடுத்துக்கொண்டு சிணுங்குவது அவள் பக்க சந்தோஷம். பேச்சும், தொட லும் ஆவேசமாயின. பேச்சால் தொடல் சுலபமாயிற்று. தொட்டதால் பேச்சு எல்லை தாண்டி போயிற்று.

''உன்னைப் பார்த்தா ஒரு பிராஸ்டியுட் மாதிரிதான் படறது. பொண்டாட்டி மாதிரியே படலை. உன் உடப்புலயும், முகத்துலயும் அப்படி ஒரு அமைப்பிருக்கு.''



எல்லாம் முடிந்த பிறகும் பத்மநாபன் பேச்சு தொடரு வான்.

''அது உங்க புத்தி. உங்க பார்வை துரியோதனன் ஊர் முழுக்க சுத்திட்டு வந்து எல்லா பொம்பளையயும் தேவடியா, எல்லா ஆம்பளையும் அயோக்கியன்னான். உங்களுக்கு உங்கம்மாவ பார்த்தா கூட அப்படித்தான் தோணும்.''

பத்மநாபன் சட்டென்று அதை ஆழமாக எடுத்துக் கொண்டான். அதைப்பற்றி யோசித்தான். அம்மாவை நினைவு கூர்ந்தான். அம்மாவை அசிங்கமாக நினைக்க முடியவில்லை. அம்மாவை நினைக்கும்போது அவள்சிறு வயதிலேயே விதவையானதுதான் ஞாபகம் வந்தது. உறவினர் வீட்டில் அடைக்கலம் என்று போய் அங்கே உட்கார்ந்து சோறு தின்ன பயந்து வேலையில் ஈடுபட்டு அம்மா சளைக்காமல் வேலை செய்கிறாள் என்பதை புரிந்து கொண்டு வீட்டின் அத்தனை வேலைகளையும் அவள் மீது சுமத்தி ஆண்டார்கள்.

''புருஷன் போய்ட்டான்னா உப்பு புலி சேர்த்துக்க கூடாது. இனிப்பு சாப்பிடவே கூடாது. குறைச்சலா சாப்பிடு. நிறைய வேலை செய். அய்யோ புருஷன் இல் லாத போயிட்டானேன்ற துக்கம் வரவே வராது.''

அம்மா தேசலாய் போனாள். கன்னம் ஒட்டி, பற்கள் தூக்கி, முடிகள் உதிர்த்து நரம்புகள் ஓடும் குச்சி கையும், ஒரு நகை கூட இல்லாத வெற்றுக் கழுத்துமாய் வலம் வந்தாள்.

அவளை சதிராடுபவளாய், எந்த ஆணோடும் சல்லா பிக்கறவளாய் நினைத்துக் கொள்ளவே முடியவில்லை. பத்மநாபன் அம்மாவை நினைத்தபடியே மல்லாந்து விட்டம் பார்த்தான்.

''என்னது உங்கம்மாவ சொல்லிட்டேன்னு வருத்தமா யிடுத்தா. சில பேரை தப்பாகவே நினைக்க முடியலை பாத்தேளா, அம்மாங்கிறது உடம்பில்லை. அம்மாங்கிற உடம்பு வளத்த உடம்புதான் இது. ஆனாலும் அம்மாவ உடம்பா பார்க்க முடியலை. அதே மாதிரிதான் பொண்டாட்டியும். பொண்டாட்டிங்கிற உடம்பை விதவிதமா அனுபவிச்சாலும் பொண்டாட்டிங்கிறது உடம்பில்லை. பொண்டாட்டிங்கிறதுக்கு அர்த்தம் பெரிய ஆதரவு. ஒரு மனுஷனோட இன்னொரு முகம். ஒரு மனுஷனோட இன்னொரு குரல் குரலுக்கு போய் கற்புடையது. இல்லாததுன்னு சொல்ல முடியுமா.''

அதுவரை எகிறிக் கொண்டிருந்த காமம் மனைவியின் பேச்சுக்கு பிறகு முற்றிலுமாய் அடங்கி அவளை ஆமோதிப் பதாய் மாறி காதலாக பொங்கும். அந்த காதலும் உடம்பின் அசைவுகளாக மாறும் அந்த அசைவும் கூடலில் முடியும்.

ஆண், பெண் உறவு ஒரு சிக்கலான கவிதை. உன்னிப் பாய் கவனிக்க பலவித அர்த்தங்கள் அங்கே தெரியவரும். காமத்தோடு ஈடுபட்ட அதே புருஷனே ஏதோ ஒரு மனமாற்றத்தில் மிகுந்த காதலோடு மனைவியோடு ஈடுபடுவான். இவை இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தை கூடல் மிக தெளிவாக காட்டிக் கொடுக்கும்.

இரண்டுமுறை ஈடுபட்ட அசதிதான் பத்மநாபனை விடிந்த பிறகும் தூங்க வைத்தது. எழுந்து மணி பார்த்து விட்டு இன்னும் சிறிதுநேரம் தூங்கலாம் என்று முழு தூக்கமும் இல்லாமல் முழு விழிப்புமில்லாமல் உடம்பு உறங்கி கிடக்க மனசு விழித்துக் கொண்டிருக்கும் நேரம். மறுபடியும் மனைவியின் உடம்பு ஞாபகம் வரும் நேரம். படுக்கையின் கதகதப்பும், நினைவுகளின் சந்தோஷமும் பத்மநாபனை ஒரு மயக்க நிலையில் கொண்டுபோய் வைத்தன. ஏழு ஏழே கால். ஏழே முக்கால். எட்டு



என்று மனம் மணியை நகர்த்திக் கொண்டிருந்தது. காலம் நகர் வதை உணர்ந்து கொண்டே மனம் தூங்கிக் கொண்டிருந்தது.

''இதுக்கு மேல தூங்கினா நல்லாயிருக்காது. எழுந்தி ருங்க.'' அவள் உலுக்க அவன் எழுந்திருந்தான்.

பல்துலக்கி காபிக்கு தினசரி பத்திரிகையோடு உட கார்ந்தபோது வாழ்க்கை மிகுந்த சந்தோஷமாய் தோன்றியது. அப்படியொரு சந்தோஷத்திற்கு அம்மா காரணம் என்று தோன்றியது.

வேறு யாருக்காவது இப்படி நினைவுகள் வருமா என்று தெரியவில்லை. மனைவியை நினைக்கும்போது அம்மாவின் ஞாபகம் வருகிறது. அம்மாவை நினைக்கும் போது மனைவியின் ஞாபகம் வருகிறது. இந்த மனைவி அம்மாவால்தான் கிடைத்தாள்.

''பெண் பார்க்கிறதுக்கு என் புள்ளை வரமாட்டான். நான் தான் பார்ப்பேன். சொஜ்ஜி, பஜ்ஜி, வெத்தலை, பாக்கு, பழமெல்லாம் வேண்டாம். ஜில்லுன்னு ஒரு சொம்பு ஜலம் முக்கா டம்ளர் காபி. என் கூட யாரும் வரமாட்டா. என்னுடைய டி. வி. எஸ் மொபட்ல நானே வருவேன். கோவில் பிரசாதம் கொடுத்துட்டு, உங்களோட, உங்க பொண்ணோட கொஞ்ச நேரம் உட்கார்ந்து பேசிட்டு கிளம்பிடுவேன்.''

''நான் வேண்டாம்னு சொன்னா உங்க பொண்ணு நல்லாயில்லைன்னு அர்த்தமில்லை. என் புள்ளையைவிட நல்ல வரன் உங்க பொண்ணுக்கும் கிடைக்கப் போற துன்னு அர்த்தம். உலகத்தில எந்த விஷயமும் வேஸ்ட் இல்லை. எந்த ஜிவராசியும் அல்பமில்லை. அது அதுக்கும் நல்ல கதி. அது அதுக்கும் உண்டான காலத்தில் கிடைக் கும்.''

''புள்ளை கொடுத்து பொண்ணு எடுத்துண்டாதான் உறவா. இந்த நெம்பர்ல இந்த தெருவுல ஒரு பொண்ணு இருக்கா போய் பாருங்கோன்னு நான் சொல்ல மாட்டேனா''

''ஒரு படையா போய் பெரிய எதிர்பார்ப்பை கொடுத்திட்டு கூட்டிண்டுபோன பத்து பேருக்கு நடுவுல வேண்டாம்னு சொல்றது பெரிய வேதனை. ரொம்ப அவமானம் அது. சம்பந்தப்பட்ட பெண் மனசு மருகும். இந்தக் கெடுதல் பண்ணக்கூடாதுன்னே நான் புள்ளையக் கூட கூட்டிண்டு வராத தனியே வரேன்.''

''அப்போ நாங்க புள்ளைய பார்க்க வேண்டாமா'' உங்களுக்குள்ள கேள்வி வரும். ஆவல் வரும். நிச்சயமா பார்க்கணும். நான் உங்க பொண்ணைப் பார்த்து சரின்னு சொன்னதும், நீங்க தாராளமா உங்க பொண்ணை கூட்டிண்டு வரலாம் எங்க வீட்டுக்கு வந்து உங்க உறவு படை சூழ சொஜ்ஜி, பஜ்ஜி சாப்பிட்டு என் புள்ளையோட பேசலாம்.''

''எனக்கு பெரிய உறவுக்காரர் கிடையாது மாமி. என் குழந்தைக்கு பத்து வயசாயிருக்கும்போது என் ஆத்துக்காரர் போய்ட்டார். ஹார்பர்ல சரக்கு இறக்க மேற்பார்வைக்கு போன போது கிரேன்ல தொங்கற ஊக்கு அப்படியே வந்து மண்டையில மோதிடுத்து. நச்சுனு ஒரு இடி, இடிச்ச மூணாவது செகண்ட் பிராணம் போயிருக்கணும். ஒரு கீறல் இல்லை. ஒரு காயம் இல்லை. பின் மண்டையில லேசா ஒரு புடைப்பு. வலியில கண்ணை இறுக மூடிண்டவர்தான். அப்புறம் திறக்கவேயில்லை. கண்ணுக்கு கிட்ட மட்டும் இறுக்கி மூடிண்ட மாதிரி சுருக்கமா இருந்தது.

''ஏதோ கோவிச்சுண்டு தூங்கறா மாதிரி, பிடிவாதம் பிடிச்ச குழந்தை மாதிரி மூஞ்சி இருந்தது. அந்த முகம் எனக்கு மறக்கவே மறக்காது.''



அம்மா பேசப் பேச அவளை சுற்றி உட்கார்ந்த எல்லோரும் ஆவலாய் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அம்மா எப்போதும் படபடப்பில்லாமல் பேசுவாள். நிதானமாய் நடந்து கொள்வாள். எந்தவித கேள்வியையும் எதிர்கொள்வாள். அம்மா அதிகம் யோசிப்பவள் என்று அவள் பேச்சிலிருந்து தெரியும்.

''சாகறதுக்கு முதநாள் பேசிண்டு இருந்தார். ஒரு பையன் போறுமா. ஒருத்தனுக்கு ஒரு பையன்தான்னா அவன் இல்லாம இருக்கிறதுக்கு சமம்னு சாஸ்திரத்துல சொல்லியிருக்கு. ஒரு பொண்ணோ புள்ளையோ வேண்டாமான்னு கேட்டார்.''

''நாம குடித்தனம் பண்ணதுக்கு அடையாளமா ஒரு புள்ளை அது போதும். ஒன்னு பெத்தும் உயிரோட இருக்கலாம். நாலு பெத்தும் ஆத்தோட போகலாம். குழந்தைகள் பொறக்கறது எப்படி நம்ம கையில இல்லியோ அதேபோல் அது இருக்கிறதும் நம்ம கையில இல்லை. எனக்கு இவன் போறும். இவனை ஒழுங்கா நல்லவனா வளர்க்கணும்.''

''இவன் பெரிய பணக்காரனாகணும், விளையாட்டுல சங்கீதத்துல புகழோட இருக்கணும்னு எல்லாம் எனக்கு ஆசையில்ல. கல்யாணம் பண்ணி குழந்தை பெத்துக்கணும். கை, கால் மூளி இல்லாத அவா நல்ல குழந்தைகளா இருக்கணும். அந்த குழந்தைகளுக்கு உண்டான வசதியை எம் புள்ளை சம்பாதிச்சுக் கொடுக்கணும். குழந்தைகளுக்கு இருபத்தி அஞ்சு வயசான பிறகு எம் புள்ளை சன்னியாசியாவோ அல்லது பொண்டாட்டியோட இல்லறத் துறவியாகவோ தர்ம நியாயங்களை ஊருக்கு சொல்லணும். அப்படி தர்ம நியாயம் சொல்ற வாழ்க்கை அவன் வாழ்ந்துட்டுதான் போகணும். இன்னிக்கு உலகத்துக்கு ரொம்ப முக்கியம் தர்ம நியாயம்

தான். அந்த தர்ம நியாயம் சொல்றதுக்கு ஒருத்தர் தர்ம நியாயத்தோட வாழணும்.''

''ஒரு புள்ளை தர்ம நியாயத்தோட வாழணும்னா அவன் பொண்டாட்டி தர்ம நியாயத்தோட இருக்கணும்.''

''அதுக்காகத்தான் மனசுக்குள்ள நிறைய கணக்கு போட்டு எம் புள்ளைக்கு நல்ல பொண்ணா தேடறேன்.''

''ஹாங் நீங்க கேக்க வர்றது புரியறது. நீ கணக்கு போட்டா போதுமா. மேல ஒருத்தன் இருக்கானேன்னு தானே கேக்கிறேள்.''

''நான் நாள் தவறாம பிரேயர் பண்றேன். பகவானே என் புள்ளைக்கு நல்ல பொண்டாட்டியைக் கொடு. அவனைத் தர்மவானா வளர்க்கிற மனைவியைக் கொடு. நான் இதை எனக்காகக் கேக்கலை. உனக்காக கேக்கிறேன் உன்னுடைய தர்மம் இங்கே நிலைச்சு நிக்கணும்னு கேக்கிறேன். அப்படின்னு பிரார்த்தனை பண்ணிட்டு தான் வெளியே வருவேன். அவர் உத்தரவு இருந்தால் தான் பொண்ணு பார்ப்பேன்.''

''இப்ப நான் உங்க வீட்டுக்கு வந்திருக்கிறது பகவானுடைய அனுக்கிரஹம். அவர் கட்டளை போய் பாருன்னு உத்தரவு கொடுத்தபிறகுதான் வந்திருக்கேன்.''

''ஒருத்தர் கேட்டார். இத்தனை நம்பிக்கை இருக்கச்சே நீ எதுக்கு அலையணும். பகவானே உனக்கு மருமகளை கொண்டு வந்து விடுவார்னு... வீட்டோட இருக்கலாமேன்னா.''

அது அப்படியில்லை. என்னை ஒரு இடத்துக்கு பகவான் அனுப்புறார்னா காரணமில்லாம அனுப்பமாட்டார். இப்ப மூணாந்தடவையா நான் பொண்ணு பாக்க வரேன். முதல் தடவை என்ன நடந்ததுன்னு தெரியுமா நான் போய் உட்கார்ந்து இப்படி பேசினவுடனே பக்கத்தில உட்கார்ந்திருந்த பொண்ணு ஜாடை காமிச்சு உள்ளே கூப்பிட்டது.''



''நான் ஒரு பையனை லவ் பண்றேன் மாமி. நேத்திக்கு சாயந்திரம் எங்க வீட்டுக்கு தெரியாம ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிண்டேன். நீங்க டக்குன்னு வேண்டாம்னு சொல்லாத ஒரு பத்து நாள் இழுத்தடிச்சா அதுக்குள்ள இந்த விஷயத்தை சரி பண்ணிடுவேன். மாட்டேன்னு சொல்லாம் எனக்கு இந்த உதவி பண்ணனும்.''

''இதுல என்ன கூத்து தெரியுமா. அவள் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிண்ட பையனும் நான் பெண் பார்க்க போவும்போது அங்க நின்னுண்டு இருந்தான். அவர் பக்கத்து பையனா கூடமாட ஒத்தாசை பண்ணிண்டு இருந்தான்.

''பகவானே என்ன சோதனை இதுன்னு நான் அஞ்சு நிமிஷம் அங்கேயே உட்கார்ந்திருந்தேன். டக்குனு உள்ள பொறி தட்டித்து. காசு பணம் இல்லேங்கிறதுனாலதான் பொண்ணைப் பெத்தவா அந்தப் பையனை ரிஜக்ட் பண்ணிட்டு நம்ம சம்பந்தத்தை எதிர்பார்த்திருக்கா. ஆனால் இந்த குழந்தைகள் ரெண்டு பேரையும் சேத்து வைக்கிறது தான் சரி. முதநாள் ரிஜிஸ்டர்மேரேஜ்பண்ணிண்டுமறுநாள் அந்த பொண்ணை பொண் பாக்கறதுக்கு ஒருத்தன் தயார் படுத்தி வைச்சானா அவன் பொறுமைசாலியா கெட்டிக்காரனாக இருக்கணும்.''

''அந்தப் பெண்ணும் இந்த வேதனையை வெளியே காமிக்காம சாதாரணமா இருக்கறது. ஆழமா, கெஞ்சாம என்கிட்ட விஷயம் சொன்னதும் ,எனக்கு ரொம்ப புடிச்சு போச்சு.''

''எனக்கு பொண்ணை ரொம்ப புடிச்சிருக்கு என் புள்ளை வெளியூர்ல இருந்து வந்ததும் ஒரு முடிவு சொல்

றேன்னு சொல்லிட்டு வந்துட்டேன். அஞ்சு நாளாச்சு, ஆறு நாளாச்சு, பத்து நாளாச்சு தினம் புள்ளை வந்துட்டானான்னு பொண்ணை பெத்தவங்ககிட்டேயிருந்து டெலிபோன் வருதே தவிர, அந்த பொண்ணுகிட்டேயிருந்து ஒரு நியுசும் வரலை. தினம் ரெண்டு மணிநேரம் அந்த பொண்ணுக்காக நான் துர்காஷ்டகம் படிச்சேன்.''

''நைன்த் டே அந்த பொண்ணு ஓடி வந்துடுத்து அந்த பையன் என் வீட்டு வாசல்ல நிக்கிறான்.''

''எத்தனையோ விதமா சொல்லிப் பார்த்தேன். மாமி அவா கேட்கலை. ரிஜிஸ்டர் மேரேஜ் ஜெராக்ஸ் காபியை வைச்சுட்டு யாருமில்லாத போது பொட்டி படுக்கையை எடுத்துண்டு கிளம்பிட்டோம். கஷ்டமாதான் இருக்கு இஷ்டமில்லாமதான் செய்யறோம்.''

''ரெண்டு பேரும் ஒரே ஜாதிதான் கல்யாணம் பண்ணினா என்ன, இது வேற மாதிரி ஜாதி வெறி. காசுள்ள ஜாதி. காசு இல்லாத ஜாதி நீங்க பண்ண உதவியாலதான் வீட்டை விட்டு போறது சௌகரியமா இருந்தது. வடக்க போறாம் மாமி. போய் செட்டிலாயிட்டேன்னா, லெட்டர் எழுதறேன். செத்துப் போனா பேப்பர்ல வரும். செட்டிலாகிறதோ, செத்துப் போறதோ ஒரு மாசத்துல தெரிஞ்சுடும்.''

''என்ன பாக்கிறேள் நாவல் மாதிரி இருக்குன்னு நினைக்கிறேளா. என் புள்ளை இதை நாவலா எழுதப் போறான். ரொம்ப நன்னா கதை எழுதுவான். இது வரைக்கும் மூணு சிறுகதை தொகுப்பு வந்திருக்கு.''

''அந்தப் பொண்ணுக்கு வெங்கடேசப் பெருமாள் படமும், ஒரு ரவிக்கை துணியும் புது நைலக்ஸ் புடவையும் ஆயிரத்தி ஏழு ரூபாய் பணமும் வைச்சு கொடுத்தேன். ரெண்டு பேரும் கால்ல வுழுந்து நமஸ்காரம் பண்றதுக்கு வந்தா. வேண்டாம் பண்ணாதீங்கோ. பெத்தவாளுக்கு



நமஸ்காரம் பண்றதுக்கு முன்னாடி வேற யாருக்கும் சேர்ந்தாப்போல நமஸ்காரம் பண்ண வேண்டாம். அப்படி பண்றதில்லைன்னு ஒரு சங்கல்பம் நீங்க எடுத்துக்கணும்னு சொன்னேன். அந்தப் பொண்ணு மட்டும் நமஸ்காரம் பண்ணிண்டு எடுத்துட்டு போயிடுத்து.''

''நாலு நாள் பொண்ணைப் பெத்தவங்ககிட்டேயிருந்து தகவலே இல்லை. அப்புறம் நானா போன் பண்ணி எம்புள்ளை ஊர்ல இருந்து வர்றதுக்கு நாள் ஆகும், நீங்க அதுவரைக்கும் காத்துண்டு இருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படின்னு சொன்னதுதான் தாமதம். அந்த பக்கத்திலேருந்து ஒன்னு அழுகை. என் பொண்ணு ஓடிப் போயிட்டா மாமின்னு அழறார். நான் சமாதானம் சொல்லிவிட்டு போனை வைச்சிட்டேன்.

''ஒரு மாசம் கழிச்சு டெல்லியிலிருந்து லெட்டர் வந்தது. ரெண்டுபேருக்கும் ஒரே இடத்துல வேலை கிடைச்சிருக்கு. ஆபீஸ் பின்னாடியே வீடு கிடைச்சிருக்கு, ஆபீஸை காவல்காக்கறதுக்காக கூட இருநூறு ரூபாய் கிடைக்கிறது சாப்பாட்டுக்கு கவலை இல்லை. குளிர்தான் தாங்கவே முடியலை. நீங்க கொடுத்த ஆயிரம் ரூபாய்ல ஆளுக்கொரு தலைகாணியும், கம்பளியும் வாங்கிண்டோம். ராத்திரி படுத்துக்கற போதெல்லாம் உங்களை நினைச்சுக்கிறோம் அப்படின்னு அந்த பொண்ணு எழுதியிருந்தா.''

''அவளை நல்ல விதமா சேத்து வைக்கத்தான் என்னை பகவான் அங்க அனுப்பிச்சிருக்கார். அடுத்ததா ஒரு பெண் பார்த்தேன்.''

''பெண் பார்க்கிற இடத்தில பொண்ணுதானே பாடணும். என் சிஸ்டம் வேற மாதிரி நான்தான் பாடுவேன். அந்த வீடு நன்னா இருக்கணும். அந்த வீட்டில் இருக்கறவா சந்தோஷமா இருக்கணும். அந்தப் பொண்

எனக்கு மருமகளா வருதோ இல்லியோ அந்த பொண் நல்ல இடத்துல வாழ்க்கைப்பட்டு நல்லபடியா இருக்க ணும்னு வேண்டிண்டு ஒரு பாட்டு பாடுவேன். அதுவும் கண்ணை மூடிண்டு ஆத்மார்த்தமா பாடுவேன்.''

இந்த பாட்டு கேட்டிருக்கேளா.

அச்சுதம், கேசவம், ராமநா ராயணம்
கிருஷ்ணதா மோதரம் வாசுதேவம் ஹரிம்

பொண்ணு ஆத்துக்காரா நமுட்டு சிரிப்பா சிரிப்பா நான் கண்ணை மூடிண்டு பாடினாலும் என் மனசுக்குள்ள அது தெரியும். என் பாட்டு, என் பேச்சு எதுவும் அந்த ரெண்டாவது வீடு ரசிக்கலை. இந்த மாமி லூசு போல இருக்குன்னு காது படவே பேசினா, பெரியவா பேசினது அந்தப் பொண்ணுக்கு தைரியத்தை கொடுத்திருக் கணும்.

அந்தப் பொண்ணு உள்ள போய் யாருகிட்டயோ பேசிட்டு நேரா வந்து என் பக்கத்துல நின்னது.

மாமி உங்களை எனக்குப் பிடிக்கலை. இந்த சம்பந் தம் வேண்டாம் அப்படின்னு சொல்லிடுத்து.

ஏம்மான்னு கேட்டேன். நீங்க நார்மலா இல்லை உங்கள மாதிரி கண்களை மூடிண்டு இருக்கிறவாளால காசு சம்பாதிக்க முடியாது. காசு சம்பாதிக்காத என் னால குடித்தனம் பண்றது கஷ்டம். எனக்கு நிறைய சம்பாதிக்கிற புருஷன் வேணும் மாமி. உங்கள வருத்தப் படுத்தியிருந்தா மன்னிச்சுக்கோங்க அப்படின்னது.

உனக்கு ரொம்ப பணக்கார புருஷன் கிடைப்பான். கவலையே படாத. அப்படி நல்ல புருஷன் செல்வத் தோட கிடைக்கறதுக்கு ஒரு மந்திரம் இருக்கு. அதைச் சொல்லித்தரேன் உட்காருன்னு அந்தப் பொண்ணுக்கு ரொம்ப அக்கறையா சொல்லிக் கொடுத்தேன்.



எண்ணி ஒரு மாசம் முப்பதே நாள் அந்தப் பொண்ணை சங்கீத சபாவுலபாத்துட்டு ஒரு கோடீஸ்வர குடும்பம் விசாரிச்சு அவா செலவுலயே கல்யாணம் பண்ணிண்டா.

இந்த மாமி ஒரு மாசம் முன்னாடியே எனக்கு ஸ்லோகம் சொல்லிக் கொடுத்தா அதனாலதான் இந்தக் கல்யாணம் ஆச்சுன்னு ஒவ்வொருத்தர் கிட்டயும் சொன்னா.

நல்லது சொல்றவான்னா நம்ம ஜனங்களுக்கு ஒரு மயக்கமாச்சே. என்னை என்னமோ ஜோசியக்காரின்னு நினைச்சுட்டு ஏகப்பட்ட கேள்வி. ஏகப்பட்ட அழுகை. எப்படியோ தப்பிச்சுண்டு வந்துட்டேன்.

''இங்கயும் உங்க பொண்ணைப் பாக்கறதுக்கு முன்னாடி நீங்க நல்லாயிருக்கணும்னு பாட்டு பாடப் போறேன். உங்களுக்கு ஆட்சேபணை இல்லியே.''

''எங்களுக்கு அந்த பாட்டுத் தெரியும் மாமி; நாங் களும் பாடலாமா.''

பெண் பார்க்க வந்ததை மறந்து போய் அந்த வீடு பாடியது.

அச்சுதம் கேசவம் ராமநா ராயணம்
கிருஷ்ணதா மோதம் வாசுதேவம் ஹரீம்
ஸ்ரீதரம் மாதவம் கோபிகா வல்லபம்
ஜானகி நாயகம் ராமச்சந்திரம்பஜே;
அச்சுதம் கேசவம் சத்யபா மாதவம்
மாநவம் ஸ்ரீதரம் ராதிகா ராதிதம்
இந்திரா மந்திரம் ஸேதசா சுந்தரம்
தேவகி நந்தனம் நந்தஜம் ஸந்ததே.

விஷ்ணவே ஜிஷ்ணவே சங்கிணே சக்ரிணே
ருக்மிணீ ராகிணோ ஜானகி ஜானயே
வல்லவீ வல்லபா யர்ச்சிதா யாத்மனே
கம்ஸவிந்த த்வம்ஸினே வம்ஸினே தேநம.

எந்த காரியங்களுக்காக அங்கு ஆயத்தங்கள் நடந்தனவோ அவை அனைத்தும் முற்றிலுமாக மறக்கப் பட்டது. பாட்டு முடிந்த பிறகு அங்கு கணமும் குளுமையானது அமைதி தோன்றியது. மனம் தொடர்ந்து பாட்டை பாடிக் கொண்டிருந்தது,

''பொண்ணைக் கூட்டிண்டு வரலாமே,'' அம்மா அழைத்தாள்.

அறைக்குள் இருந்த அனிதா ஹாலுக்கு வந்தாள். அம்மாவுக்கு அருகே உட்கார்ந்து கொண்டாள்.

''எம்புள்ளைய பாக்க என் வீட்டுக்கு வர்றியா.'' அம்மா ஆதுரயமாய், சாதாரணமாய் கேட்டாள்.

''வரலை.''

''ஏன்?''

''உங்களைப் பார்த்ததே உங்க புள்ளைய பார்த்தாப் போல,''

''அதெப்படி இவ்வளவு திடமா சொல்ற.''

''பொண்ணு பாக்கிறதுக்கு கும்பலா வரக் கூடாதுன்னு சொல்றதே எனக்கு புடிச்சிருக்கு. ஒரே ஒருத்தர் மட்டும் பொண்ணு பார்த்துட்டு வந்து புள்ளை பாக்கிறதுக்கு கும்பலா போறதுன்றது ரொம்ப நல்ல ஐடியா. பொண் பாக்கறதுக்கு அவர் வராத மாதிரி, புள்ளை பாக்கிறதுக்கு அவள் வரலைன்னா என்ன செய்வார். அதை தெரிஞ்சுக்க ஆசை. அங்கு அவர் யார்னு தெரிஞ்சி போய்டும்.''



''என்ன தெரிஞ்சு போய்டும்.''

''அறிவார்த்தமா யோசனை பண்ணி பெண்ணை பெத்தவாளுக்கு தொந்தரவு கொடுக்க கூடாதுன்னு அவர் வரலையா... இல்லை அம்மா சொல்றதால வரலையா அப்படின்னு தெரிஞ்சு போய்டும்.''

''எனக்கு புரியலை. சரியாச் சொல்லு.''

''புள்ளைய பார்க்க நான் வரலைன்னு தெரிஞ்சு துடிச்சார்னா அது நார்மல். பொண்ணு வரலைன்னா பரவாயில்லை. அது எனக்கொன்றும் முக்கியமில்லைன் னார்னா அது அப்நார்மல். அம்மாவுக்கு அடங்கின புள்ளைன்னு அர்த்தம். அறிவில்லாத புள்ளைன்னு அர்த்தம். அம்மா என்ன சொன்னாலும் கேட்கிற புள்ளைன்னு அர்த்தம்.''

''அம்மா என்ன சொன்னாலும் கேட்கிற புள்ளைய வைச்சிண்டு எவளாலயும் ஒழுங்கா குடித்தனம் பண்ண முடியாது. என்னைப் பாக்கிறதுக்கு அவர் ஆசைப்படணும். தனக்கு அழகான பொண்டாட்டி வரணும்னு அவர் ஆசைப்படணும். அழகுக்கு ஆசைப்பட்டாதான் அதைக் காபந்து பண்ணத்தோணும்.''

''பெண் பார்க்க கும்பலா வரவேண்டாம்னா நல்லாயிருக்கு. ஆனா பொண்ணும். புள்ளையும் பாத்துக்கவே வேண்டாம்னா அது நல்லாயில்லை. அது ஆடு, மாடு வியாபாரம் மாதிரி ஆயிடும்.''

''அடிக்குழந்தை... இதுக்கு கோவிச்சுண்டியா. ஐயாம் சாரி'' அம்மா லேசாய் பதறினாள்.

''கடவுளே நான் அப்படி கோவிச்சுக்கவேயில்லை, உங்க மனசைப் புண்படுத்தணும்னு எண்ணமேயில்லை. இது எல்லாம் சரி. அம்மா மட்டும் பெண் பார்க்கவர்றது,

வந்தவுடனே அந்த வீடு நன்னாயிருக்கட்டும்னு பிரார்த்தனை பண்ணறது, பாட்டு பாடறது, சாதாரணமா தரையில் உட்கார்ந்துண்டு பேசறது, சீர், வரதட்சனைன்னு பேசாத குடும்பத்தில் இருக்கிறவா யோக்கியதையைப் பற்றி பேசறது, குணங்கள் தெரிஞ்சுக்கிறது, மூணாம் பேருக்கு தெரியாம வந்துட்டு போயிட்டு எல்லாரையும் புள்ள பாக்க கூப்பிடறது, பெண்ணை பெத்தவளை சந்தோஷமா கம்பீரமா ட்ரீட் பண்றது எல்லாம் நல்லாருக்கு.''

''ஆனால் அவர் யார்னு எனக்கு பார்க்க ஆசையா இருக்கிற மாதிரி, நான் எப்படியிருக்கேன்னு பாக்கிறதுக்கு அவர் ஆசையா இருக்கணும். என்னைபாத்தவுடனே யப்பா...டக்கர் குட்டி, நாட்டுக் கட்டைன்னு அப்படியெல்லாம் தோணனும், தோணினாதான் நல்லது. அப்பத்தான் எனக்கு மரியாதை.''

''அம்மா யாரைக் கை நீட்டினாலும் அவளே பொண்டாட்டின்னு ஒருத்தர் நினைச்சா அது மட்டம். ரொம்ப மட்டம்.''

அம்மா சிரித்தாள். அனிதாவை மெல்ல அணைத்துக் கொண்டாள்.

''எம்புள்ளை உன்னைப் பாக்கலேன்னா சொல்ற. நாலு தடவை ரொம்பகிட்ட பாத்துட்டு அப்புறம்தான் என்னையே அனுப்பிச்சிருக்கான்.''

''எப்படி.''

''உங்க வீட்டுக்கு வந்திருக்கான்.''

''எப்போ.''

''புதுசா வாஷிங்மெஷின் வாங்கினீங்களாமே ஹோம் எக்ஸிபிஷன்ல.''



''ஆமாம்.''

''அங்க பேசினது எம்புள்ளை. வாஷிங் மெஷின் கொண்டாந்து இறக்கினது எம்புள்ளை. கீழ் சக்கரம் உடைஞ்சிடுத்துன்னு சொன்னதும், அத மாத்த வந்ததும் எம் புள்ளை. வாஷிங் மெஷின் சரியா இருக்கான்னு போன வாரம் கேக்கறதுக்கு வந்ததும் என் புள்ளை.''

''வந்தது மெக்கானிக் இல்லையா'' அனிதா வியந்தாள். அவள் வீடு நகம் கடித்தது.

''நீலச் சட்டை, நீலப்பேண்ட் யூனிபார்ம் மாதிரி போட்டிருந்தானே'' மறுபடி யோசித்து சந்தேகம் கிளப்பினாள்.

''ஆமாம் சர்வீஸுக்கு வரும்போது புளூ யூனிபார்ம்ல வருவான். ஆபீஸ்ல இருக்கும்போது டை கட்டிண்டு வெள்ளை சட்டையில இருப்பான். எல்லா இன்ஜினியர்ஸும் ஒரு மாசத்துல அஞ்சு சர்வீஸ் போயாகணும். மெக்கானிக் சொல்றதை மட்டும் முக்கியமா எடுத்துக்காம சேல்ஸ் இன்ஜினியரே, சர்வீஸ் இன்ஜினியராகவும் இருக்கணும். விக்கிற இன்ஜினியருக்கு வாங்கிறவாளுடைய பிரச்சனை என்னன்னு நேரடியா தெரியணும். இவாளுது ரொம்ப நல்ல கம்பனி. கொஞ்சம் கெட்டிக்கார இன்ஜினியரா இருந்தாதான் இந்தக் கம்பெனியில தாக்கு பிடிக்க முடியும்'' அம்மா கண்சிமிட்டி சொன்னாள்.

இதெல்லாம் கிடக்கட்டும். என் புள்ளை உன்னைப் பார்த்தாச்சு. ஆசையா பார்த்தானா, அலட்சியமா பார்த்தானான்னு நான் தெரிஞ்சுக்கலை, நீ பேசினது எனக்கு புடிச்சிருந்ததடி பெண்ணே. எம்மேல ஆசைப் படற புருஷன் வேணும்னு சொன்ன பாரு அது நன்னாயிருந்தது. அவன் அம்மா வளர்த்த புள்ளைதான். ஆனா அம்மாவே கதின்னு கிடக்கிற புள்ளை இல்லை. உனக்கு

எப்படி சவுகரியமோ அப்படி வந்து என் புள்ளையைப் பாரு. கும்பலா வந்தாலும் சரி, நீ மட்டும் தனியா வந்தாலும் சரி. எப்படி வரப்போற.''

வீடு நிசப்தத்தில் மூழ்கியது.

வேறு யாரோ பேச முயற்சித்த போது அம்மா கை உயர்த்தி தடுத்துவிட்டாள்...

''எப்படி வரப்போற.'' மறுபடி கேட்டாள்.

''இந்தக் கேள்விக்கு வேற யாரும் பதில் சொல்ல முயற்சி பண்ண வேண்டாம். இந்த பொண்ணே பதில் சொல்லட்டும். நீ போய் உன் ரூம்ல இரு. அதுக்குள்ள மத்த விஷயங்களை பேசிக்கிறேன். எங்க கல்யாணம் பண்ணுவா, எப்படி கல்யாணம் பண்ணுவான்னு பல விஷயங்கள் இருக்கோன்னோ. நான் கிளம்பறபோதுவந்து உன் பதில் சொல்லு. வேறு யாராவது சொல்லித் தர வந்தா வேண்டாம்னு சொல்லிடு. நீயே யோசனை பண்ணு.''

கிளம்புகிறபோது அனிதா எதிரே வந்து நின்றாள்.

''நீங்க வந்து தனியா பாக்கிறா மாதிரி நான் மட்டும் தனியா உங்க வீட்டுக்கு வந்து உங்க புள்ளையபாத்துட்டு பேசிட்டு போகணும்.''

''சபாஷ்.''

''ஆனால்விட மாட்டா.''அம்மாவின் எதிரொலிப்பை அனிதா சட்டென்று அறுத்தாள்.

அம்மா நிச்சயம் வரேன்னு சொல்லுவா. அவ என் அக்காவையும் கூட்டிண்டுதான் வருவா என் அக்காவுக்கு அவ வீட்டுக்காரர்கூட வரணும். கார் ஓட்ட அண்ணா வருவார். அண்ணா வந்தா மன்னிவருவா. அப்பா எழுந்து நான் மட்டும் என்ன பாவம் பண்ணேன்னு கேட்பார்.



யாரும் யாரையும் தள்ளமுடியாது. சப்ஜாட பத்துபேர் வருவோம். நீங்க பொறுத்துக்கத்தான் வேணும்.

அவள் வீடு அவள் பேசியதற்கு அதிர்ந்து போய் நின்றது. அந்த அதிர்ச்சியே அவள் அப்படி பேசுபவள் அல்ல என்பது காட்டியது.

''அப்படி ஒண்ணும் அவசியமில்லை. பொண்ணு பாக்கறதுக்கு பத்துபேர் போறது கேவலம்னா, புள்ளை பாக்கறதுக்கு பத்து பேர் போறதும் கேவலம்தான். நீங்க நல்ல மனுஷாள்னு தெரிஞ்சுபோச்சு. ஒருநாள் போய்ட்டு வா நீ மட்டும் போய் புள்ளையைப் பார்த்துட்டுவா'' அண்ணா உத்தரவு கொடுக்க...''

அதெப்படி என்று அம்மா எழுந்தாள்.

''அது ஒன்றும் தப்பில்லைமா'' என்று மன்னி வர,

''யாராவது ஒருத்தரை கூட அழைச்சிண்டு போ என்று அப்பா சலுகை கொடுத்தார்.''

''நானும் மன்னியும் போறோம்'' என்று அக்கா தலை தூக்க...

''ஏன் நான் வந்தா என்ன குறைஞ்சு போய்டும்'' என்று அம்மா சீறினாள். வீட்டில் கூச்சல் அதிகமாயிற்று. வாதப்பிரதிவாதங்கள் அதிகமாயின.

எல்லோரும் வாங்க என்று அம்மா கை கூப்ப வீடு அமைதியாயிற்று.

''வர ஞாயிற்றுக்கிழமை நாங்க எல்லோரும் வரோம் மாமி. அதுதான் சரி, இவளுக்கு என்ன தெரியும். அங்க வந்து வெட்கப்பட்டுண்டு தலையை குனிஞ்சுண்டு எனக்கு சொல்லத் தெரியலைன்னு இங்க வந்து முழிப்போ. இன்னிக்கும் புடவைக்கு மேட்சா பிளவுஸ் எடுக்கத் தெரியாது. நல்ல பட்டுப்புடவை எதுன்னு தடவி

பார்க்கத் தெரியாது. புத்திசாலியா இருக்கறவாதான் மாடர்னா இருக்கலாம். இவ மக்கு. இன்னிக்குதான் என்னமோ ஒழுங்கா உங்க பக்கத்துல உட்கார்ந்துட்டிருக்கா. நேந்தி கூட கார அரிசிப் பொரியை மடியில கொண்டிண்டு குத்துக்கால் இட்டு சோபாவுல உட்கார்ந்துண்டு டி.வி, பார்த்துண்டிருக்கா. இப்படி ரெண்டாங் கெட்டானா வளர்த்திருக்கோமேன்னு கவலையா இருந்தது. இவ மட்டும்போய் புள்ளை பார்த்துட்டு வந்து சரின்னா முடிஞ்சு போச்சா'' அம்மா சிடுசிடுக்க வீடு அமைதியானது.

''போன் பண்ணி எத்தனை பேர்னு சொல்லிட்டு வரோம்.''

அம்மா விடைபெற்று வந்தபிறகு ஞாயிற்றுக்கிழமை காலை போன் வந்தது.

''மாமி நான் மட்டும் வரேன். இன்னும் அரைமணி நேரத்துல வரேன்.''

''அரைமணியிலயா மணி ஏழுதாண்டி ஆறது இன்னும் அவன் எழுந்திருக்கவேயில்லை.''

''அதனால என்ன...எழுந்து எம்மூஞ்சியில முழிக்கட்டும். அதுவரைக்கும் நான் உங்களோட பேசிண்டிருக்கேன்.''

சொன்னதைவிட சீக்கிரமாக வந்து விட்டாள்.

''என்ன ஆச்சு- நீ மட்டும் வந்து நிக்கற, நான் போண்டாவுக்கு உளுந்து நனைக்கலாம்னு நினைச்சேன். நேத்திக்கு நிறைய வேலை இருந்தது. சரி கட்லட் மாதிரி பண்ணிக்கலாம்னு பிளான் மாத்திட்டேன். போண்டாவுக்கு நனைச்சு இருந்தா என்ன ஆகியிருக்கும்.''

''ஒன்னும் ஆயிருக்காது மாமி. நான் கிரைண்டர்ல போட்டு மாவு அள்ளி கொடுத்திருப்பேன். நீங்க எண்ணெல போட்டு பொரிச்சு எடுத்து கொடுத்திருப்பேள். நான் தேங்கா துருவி கொடுத்திருப்பேன். நீங்க மிக்ஸியில சட்னி அரைச்சு தாளிச்சு கொடுத்திருப்பேள். அடுக்கு நிறைய போண்டா, ஒரு டிபன் பாக்ஸ்ல சட்னி எடுத்துண்டு வீட்டுக்குப்போயிருப்பேன். அங்குஎல்லோரும் ரவுண்டா உட்கார்ந்து உங்க வீட்டு கதை பேசி சிரிச்சிருப்போம். எங்க வீட்டுக்கு உங்க கை போண்டாவ திங்கறதுக்கு கொடுப்பனை இல்லை.''



அம்மா அனிதாவின் பேச்சுக்கு வாய்விட்டு சிரித்தாள். அணைத்துக் கொண்டாள். பத்மநாபனை உலுக்கி எழுப்பினாள்.

பத்து நிமிடத்தில் பத்மநாபன் கழுவிய முகமும், கலைந்தும், கலையாமலிருக்கும் கேசமுமாய் கீழே வந்தான். கை கூப்பினான்.

சில நொடிகள் அனிதாவுக்குள் வெட்கம் பரவியது. சட்டென்று சுதாரித்துக் கொண்டாள். பதிலுக்கு வணக்கம் சொன்னாள்.

''நீங்க மட்டும் பாக்க வந்தது ரொம்ப சந்தோஷம் பெண் பார்க்கிற வழக்கம் இந்த மாதிரி மாறிப் போகணும். மாப்பிள்ளையும், பொண்ணும் வேறு எங்கயாவது பப்ளிக் பிளேஸ்ல பாத்துண்டா என்னன்னு ஒருத்தர் சொன்னா. அது மரியாதையில்லை, அதுலயும் ஏகப்பட்ட டென்ஷன் இருக்கு, இப்ப பாருங்க நம்ம ரெண்டு பேருக்கும் எந்த டென்ஷனும் இல்லை. வீட்டுக்கு படியேறி வந்த பொண்ணை யாராவது எதாவது பண்ண முடியுமா, இழிவா பேச முடியுமா.''

''அப்படியில்லை.'' மெல்லிய குரலில் அனிதா பேச ஆரம்பித்தாள்.

''உங்களுக்கு பிடிச்சிருக்குன்னு நீங்க சொல்லிட்டா இந்த சிஸ்டம் நல்லசிஸ்டம். பிடிக்கலைன்னு சொல்லிட்டா

நாங்க இதை மோசமான சிஸ்டம்னுதான் சொல்லு வோம்.''

''கடவுளே பிடிக்கலைன்னு சொல்றது வருத்தமாயிட றதுங்கறதுனாலதானே, அந்த வருத்தம் பெருசா யிடுங்கறதுனாலதானே, அந்த வருத்தம் நாலு பேருக்கு தெரிய வர்றதுங்கிறதுனாலதானே இப்படி மாத்தினது. இந்த மாப்பிள்ளை விட்டா வேற கதியில்லைன்னு எந்த பொண்ணும் இருக்கப்படாது. என்னை புடிக்கலைன்னு சொன்னா நான் வருத்தமே படமாட்டேன்.''

''ஆம்பிளைய பத்தி தெரியலை. பொம்மனாட்டிக்கு வருத்தம் வரும்.''

''தப்பு. இது முட்டாள்தனம். ஒரு ரெண்டு அடுக்கு டிபன் பாக்ஸ் தொலைஞ்சு போச்சுன்னு அம்மா அழுதா. நான் கடுமையா கோவிச்சுண்டேன். அதையும் விட மட்டம் இது. அதையும் விட அபத்தம் இது. தயவு செய்து வருத்தப்படாதீங்க. சினேகிதாளை செலக்ட் பண்ற தில்லையா. ஆயிரம் பொண்களை தெரியும். நாலு பேரு தானே தோழி. பத்து மாப்பிள்ளை பாக்கிறேள். ஒருத் தன்தானே புருஷன். இதுக்குப் போய் வருத்தப் படு வானேன். இதை ஒத்துக்கலைன்னாக்கா பழைய சிஸ்டத் துக்குதான் போகணும். காபி சாப்பீட்டீங்களா நான் உங்களுக்கு காபி போட்டுண்டு வரட்டுமா. நான் போடற காபி உங்களுக்கு புடிக்குதா பாருங்க. கொஞ்சம் சர்க்கரை கம்மியா அதே சமயம் டிகாஷன் ஜாஸ்தியில் லாம.'' அவன் சமையலறைக்குள் புகுந்தான். அவளுக்கு மிகுந்த சந்தோஷமாக இருந்தது.

நாகரீக வளர்ச்சி என்பது இதுவே, மெல்லியதாய் உடுத்துக் கொள்வதும், மேஜை போட்டு உண்பதும், மேலை முறைகளை அறிந்து கொள்வதும் நாகரீகம் அல்ல நாகரீகம் என்பது இதுவே.



மனிதர்களோடு உண்டான தொடர்பை, உறவை பல மாக்கிக் கொண்டு வருவதே நாகரீகம். பயத்திலிருந்து விடுபட்டு வருவதே நாகரீகம். அன்பாக இருப்பதற்கு ஒரு ஆசை வரவேண்டும். அப்படி ஆசை வருவதற்கு அன்பு அனுபவித்திருக்க வேண்டும். பத்மநாபன் அன்பு அனுபவித்தவன். அம்மாவினுடைய அன்புக்குள் ஆரோக் கியமாய் வளர்ந்தவன்.

''நாங்க பத்து பேர் சைக்கிள்ல மகாபலிபுரம் போலாம்னு இருக்கோம். எனக்கு இருபது ருபாய் கொடுப்பியா.''

''எதுக்கு இருபது ரூபா.''

''வாங்கி சாப்பிடறதுக்கும்மா.''

''எங்க சாப்பிடப்போற.''

அவன் ஹோட்டல் பெயரைச் சொன்னான். கிளம்பிப் போனான்.

அம்மா பத்து பேருக்கு உண்டான புளியோதரையும், அவல் கேசரியும் செய்து கொண்டு அவன் சொன்ன ஹோட்டல் வாசலில் நின்றிருந்தாள். அவன் பள்ளிக் கூடத்துப் பையன்கள் திகைத்துப் போனார்கள். அட்டைத் தட்டில் வாரி, வாரிப் போட்டுக் கொண்டு வண்ணமாய் சாப்பிட்டார்கள். தின்றபடியே நன்றி சொன்னார்கள்.

''என்னமா நீ பாட்டுக்கு திடீர்னு அடுக்கு நிறைய புளியோதரை தூக்கிண்டு வந்துட்ட.''

''எனக்கும் மகாபலிபுரம் பாக்கணும்னு இருந்தது. அம்மா நமக்கு பாத்து, பாத்து பண்றாளேன்னு நீ நன்னா படிக்க மாட்டீயா, நிறைய மார்க் வாங்க மாட் டியா. தமிழ்நாடு ஸ்டேட்ல முதலாவதா வேண்டாம், பத்துக்குள்ள ஒரு ரேங்க் வரமாட்டியா.''

அவன் இரண்டாவதாக வந்தான். கணிதத்திலும், ஆங்கிலத்திலும் அதிக மதிப்பெண் வாங்கியிருந்தான். தினத்தந்தியில் அம்மாவோடு அவன் இருக்கும் படம் வந்தது. அம்மா சகலமும் என்று அவன் சொல்லியிருந்தது பிரசுரமாகியிருந்தது. அப்படி அன்பு காட்டிய அம்மா அவன் வளர, வளர அவன் வளர்ச்சிக்கு ஏற்ற விதமாய் விலகிக் கொண்டாள்.

''எங்க காலேஜ்ல போர்த் இயர் ஸ்டுடண்டஸ் எல்லோரும் டெல்லி போறோம் அங்க இன்ஜினியரிங் எக்ஸிபிஷன் நடக்குது, இது எஜிகேஷனல் எக்ஸ்கர்ஷன் ஒரு கேமரா வாங்கணும், புக்ஸ் வாங்கணும். உன்னால எவ்வளவு காசு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடு.''

''அஞ்சாயிரம் போதுமா.''

''அடேங்கப்பா...நான் மூணாயிரம் கேட்கலாம்னு நினைச்சிருந்தேன். அஞ்சாயிரம் ஜாஸ்தி. ஆனாலும் கொடு. கிறிஸ்துமஸ் அன்னிக்கு பொறந்த நாள் வருது. அதை பசங்களோட டெல்லியில் கொண்டாடுறேன்.''

இம்போர்ட்டட் ஜெர்க்கினும், இந்தியாவில் தயாரான உயர்தரமான ஷூவுமாய் அவன் வண்டி ஏறினான்.

நூத்தி இருபத்தைஞ்சு இன்ஜினியரிங் கல்லூரி மாணவர்களால் சென்ட்ரல் ஸ்டேஷன் அமளியாயிற்று. தினம், தினம் பார்க்கின்ற நண்பர்கள் என்றாலும் அன்று கட்டிக் கொள்வதும், ஒட்டிக் கொள்வதும் அதிகமாக இருந்தது. பிள்ளை ஸ்டேஷனுக்கு கிளம்பி போனதும் அம்மா ஒரு ரெண்டாயிரம் ரூபாய்க்கு டிராவலர்ஸ் செக் எடுத்துக் கொண்டு சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு ஓடினாள்.

தொலைவிலிருந்து பையனைப் பார்த்தாள். அவனைப் போலவே நீல நிற ஜீன்ஸ் பேண்ட்டும், ஆலீவ் பச்சையில் ஜெர்க்கினும் போட்டுக் கொண்டிருந்த ஒரு



பெண் உரக்க கத்திக் கொண்டிருந்தது. எல்லோருடனும் ஒட்டி ஒட்டிப் பிரிந்தது. அது பத்மநாபனோடு அதிகம் ஒட்டிக் கொண்டது. அவனை அதிகம் அதிகாரம் செய்தது. அவனுக்காக எதையும் செய்வேன் என்பதைப்போல் பிளாஸ்க்கிலிருந்து டீ ஊற்றிக் கொடுத்தது. பத்மநாபனின் அம்மா சகலமும் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

வண்டி கிளம்ப ஐந்து நிமிடம் இருக்கும்போது பத்மநாபனின் அம்மா டிராவலர்ஸ் செக்கோடு அவனுக்கருகே போனாள். பிள்ளை திகைத்தபோது.

''காசு போறாதுன்னு நினைக்கிறேன். இந்தா'' என்று அவனிடம் கொடுத்தாள். அத்தனை நேரம் ஆட்டம் போட்ட பெண் வண்டிக்குள் பதுங்கிக் கொண்டது. பத்மநாபனின் அம்மா வண்டி கிளம்பும் வரை காத்திருந்தாள்.

''பாதிக்கு பாதி பெண் குழந்தைகளாயிருக்கு. எங்க போறதாயிருந்தாலும் ஜாக்கிரதையா போங்கோ. எல்லாரும் இருக்காங்களான்னு செக் பண்ணிக்கங்க.''

அம்மா சொன்னது மற்றவருக்குப் புரியவில்லை. அவனுக்குப் புரிந்தது. வெளியே வரமாட்டேன் என்று மறுத்தவளை மிரட்டி ஜன்னலோரம் வரவழைத்து அறிமுகப்படுத்தினான்.

அவள் பெயர் மதுமிதா. மதுமிதா சௌத்ரி அப்பா குஜராத்தி. ராணுவத்தில் கமாண்டோ. அம்மா கும்பகோணம் ஐயங்கார். பரதநாட்டியம் எக்ஸ்பர்ட்.

அந்தப் பெண் ஜன்னலக்கு அருகே சீட்டில் உட்கார்ந்து தலையைக் குனிந்து கொண்டிருந்தது. நிமிர்ந்து ஒரு முறை சிரித்தது. ஒரு ஹலோ சொல்லவில்லை. ஒரு வணக்கம் இல்லை.

நீ அவனுக்கு அம்மாவாயிருந்தா எனக்கென்ன, என்கிற விதமாக அவள் முகபாவமிருந்தது.

பத்மநாபனின் அம்மா, பத்மநாபனைப்பற்றி முதன் முதலாக கவலைப்பட்டாள்.

ஃ ஃ ஃ

## 2

அழகான பெண்களிடம் மிகப்பெரிய ஆபத்து ஒன்று இருக்கிறது. யார் அவர்களிடம் பேசினாலும் அதற்கு அடிப்படைக் காரணம் அவர்கள் அழகாயிருப்பதே என்ற எண்ணம் அவர்களிடம் வேரூன்றி விடுகிறது.

கண்ணாடி முன்பு நின்று வெகுநேரம் யார் பார்த்து கொண்டிருந்தாலும் அவர்கள் புத்தி மழுங்கிப் போகும். அதீத சுக கற்பனையில் மூழ்கியவர்களால் எதையும் முழுமையாய் கிரஹிக்க முடியாது. இதை செய்ய முடியாத போது தெளிவு வராது.

தன்னை எல்லோரும் ஆவலோடும் பார்ப்பதால் தான் முக்கியம் என்பதாய் தோன்றும். இந்த உலகத்தில் யாருமே முக்கியமில்லை. எல்லாம் உபயோகம்தான். உபயோகப்படும் வரைதான் அழகிகளோ, புலவர்களோ, அரசியல் தலைவர்களோ யாராக இருந்தாலும் உபயோகப் படுத்திவிட்டு அந்த சமூகம் வீசி எறிந்துவிடும். இறந்து போன அரசியல் தலைவர்களை வைத்து வேறு யாரும் லாபம் பெறுவதற்கு அவர்களை சிலையாகவோ, படமாகவோ, சமாதியாகவோ வைத்துக் கொள்வார்கள். விற்பனை செய்வார்கள்.



பரஸ்பரம் புரிந்துகொள்ள மயக்கமில்லாத ஒருநிலை வேண்டும். எல்லா யோக்கியதைகளையும் தாண்டி உள்ளே இருக்கிற குணாதிசயம் புரிபட வேண்டும். அதிக படிப்போ, நிறைய செல்வமோ, அழகோ, வீரமோ நிர்வாகத் திறனோ முக்கியமல்ல. உள்ளேயுள்ள அடிப்படை குணாதிசயம் என்ன, காது கொடுத்து கேட்கும் பொறுமையுள்ள மனிதனா, மனிதனின் குறை நிறைகளை புரிந்து கொள்ளும் பக்குவம் உண்டா, தனது தவறுகளை ஏற்றுக்கொள்ளும் அமைதி உண்டா அடுத்தவர் சொத்துக்கு ஆசைப்படாத நியாய உணர்வு இருக்கிறதா என்று பார்ப்பதே நல்லது. மனிதர்கள் பரஸ்பரம் இதைத்தான் அறிந்துக்கொள்ள வேண்டும்.

அப்படி இந்த நிலைகள் இல்லையெனில் பேசி தாண்டிவிட வேண்டும். சுட்டிக்காட்டி சரி செய்ய வேண்டும்.

பிறர் இப்படிச் சுட்டிக்காட்ட இடைஞ்சலாக இருக்கிற விஷயம் அழகு கர்வம், வித்யா கர்வம், பொருள் கர்வம்.

இதில் மிகவும் மோசமானது அழகு கர்வம்தான். அழகு இளமையோடு சம்பந்தப்பட்ட விஷயம். இளமையென்பது அனுபவமில்லாத நிலை. அனுபவமில்லாத நிலையில் கர்வம் கொள்வது பிடியில்லாத கத்தியை கையாள்வது போன்றது. வெகு நிச்சயமாய் அந்த கத்தி கையைக் கீறும். இது ஒரு வயதுக் குழந்தையிடம் கை துப்பாக்கியைக் கொடுப்பது போன்றது. குழந்தை நிச்சயம் அதை வாயில் வைத்துக்கொள்ளும்; விசையை இழுக்கும். ஆனால் அந்தக் குழந்தைக்கு அதன் விளைவுகள் தெரியாது.

தான் அழகி தன்னைச் சுற்றித்தான் இந்த உலகம் என்று நினைக்கும் இளம்பெண்ணும், இந்தக் குழந்தையும் ஒன்றே.

அழகுக்கு ஆட்பட்ட வாலிபன் தேன் குடித்த குரங்கு. அதாவது வாலிபமே ஆட்டம் போடும் விஷயம். குரங்கு மனம். ஒரு நிமிடம் கூட அமைதியாக இருக்கத் தெரியாத குணம். அழகான பெண்ணை காதலித்துவிட்ட வாலிபன் போதையில் உள்ள குரங்கு என்பதில் சந்தேகமேயில்லை. அவன் ஒவ்வொரு செய்கையிலும் கர்வம் கொப்பளித்து நிற்கும், தன் வாலிபம் மிகவும் மகிமை பொருந்தியது என்று நினைத்துக் கொள்ளும் மனிதர்களிடம் மகிமை பொருந்திய விஷயம் அமைதி மட்டுமே.

அந்தத் தேள் குடித்த குரங்கை எவரேனும் எதிர்த்து விட்டால், வார்த்தையில் தேளாக கொட்டி விட்டால் அந்த குரங்கு செய்யும் அட்டகாசங்களுக்கு அளவே இல்லாது போய்விடும். எதிர்பட்ட எல்லாவற்றையும் உடைக்கின்ற வெறி அந்தக் குரங்குக்கு வந்துவிடும்.

பத்மநாபனின் அம்மா சூடாமணிக்கு தன் பிள்ளை கள்ளும் குடித்து, தேளும் கொட்டிய குரங்காக இல்லாமல் இருக்க வேண்டுமே என்கிற பிரார்த்தனை வந்தது.

தன் பிள்ளை கலயத்தை வெறுமே கையில் வைத்திருக்கிறானா, கொஞ்சம் குடித்து விட்டானா இல்லை தன்னுடைய மனப்பிரமையா என்ற சந்தேகம் வந்தது.

பத்மநாபன் சென்ட்ரல் நிலையத்தில் கள் கலயத்தை கையில் வைத்திருந்தான். ரயில் நெல்லூரை தாண்டியதும் கொஞ்சம் முகர்ந்து பார்த்தான். டெல்லிக்கு போகும்போது உதடு நனைய ஒரு மிடறு விழுங்கினான். அந்தக் குரங்குக்கு அந்த போதையே அதிகமாக இருந்தது. எல்லோரும் இளக்காரமாய் பார்க்கும்படி ஆட்டம் போட ஆரம்பித்தது, பத்மநாபன் தகப்பன் இல்லாத பையன்.

பெண்களிடமிருந்து விலகியிருக்க வேண்டிய கால கட்டத்தைப்பற்றியும், பிரம்மச்சார்யத்தை காக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் ஒரு நல்ல தகப்பன் தன்



மகனுக்கு ஏதேனும் ஒருவிதத்தில் சொல்லிக் கொடுத்து விடுவான். சக்தியை செலவழிக்காது இருக்கும் தந்திரங்களை தன் அனுபவம் கலந்து விளக்கி விடுவான். இளமைக் காலத்தில் நல்ல நண்பனாய் ஒரு தகப்பன் கிடைப்பது இந்தியாவில் சிரமமான விஷயமாய் இருக்கிறது.

அந்தப் பெண் கலப்பினக் குழந்தை. ஒரு குஜராத்தியின் தோல் நிறமும், தமிழகத்தின் முக அழகும் கலப்பினத்தால் ஏற்பட்ட புத்தி கூர்மையும், காசு பணத்தால் ஏற்பட்ட செழுமையும், நாட்டியக் கலையால் ஏற்பட்ட கர்வமும் அந்தப் பெண்ணிடம் நிரம்பியிருந்தன.

அதேசமயம் உறவுக் கூட்டம் இல்லாத காரணத்தால் நிரந்தரமான தனிமை ஒன்று இருந்தது. தந்தையும், தாயும் காதலித்து பட்ட அவஸ்தைகளை கேட்டபோது பயமாக இருந்தது. நல்லது கெட்டது எதற்கும் உறவுகள் துணைவராது என்பது புரிந்து போயிற்று. தன்னைப் பற்றிய உயர்வு மனப்பான்மை வரும்போது தன் பிறப்பு பற்றிய தாழ்வு மனப்பான்மையும் இருந்தது.

அழகிய பெண்கள் முரடர்களால் கவரப்படுவதை அவள் கதைகளாகவும், திரைப்படங்களாகவும் பார்த்திருக்கிறாள். பதினாறு, பதினேழு வயதில் வெறித்துப் பார்க்கும் ஆண்களைக் கண்டு நடுங்கியிருக்கிறாள்.

நீ இதைப் பார்த்திருக்கிறாயா இப்ப பார் என்று நடுத் தெருவில் வேட்டி விலக்கி காண்பித்தவனை அவளால் மறக்கவே முடியவில்லை.

அந்த கான்வென்ட்டில் உள்ள இரண்டாயிரத்து நானூற்று முப்பத்தாறு பெண்களை விட்டுவிட்டு தன்னிடம் மட்டும் ஏன் அப்படி நடந்து கொண்டான்

என்று அவளுக்கு புரியவில்லை. பள்ளிக் கூடத்துக்கு வந்த பிரமுகருக்கு அவளை முன்னே அனுப்பி மாலை போடச் சொன்னார்கள். தன் கழுத்தில் விழுந்த மாலையை அவள் கழுத்துக்கு போட்டு, போட்ட சில வினாடிகளில் அவள் மார்பகத்தை அந்த வயசாளி நெருடியது அதிர்ச்சியாக இருந்தது.

வகுப்பில் உள்ள பெண்கள் அவள் மாலை மாற்றிக் கொண்டதை குறிப்பிட்டு கேலி செய்தார்கள். இன்னிக்கு முதலிரவு என்றெல்லாம் கேலி செய்து கொண்டு போனார்கள். அவளைக் கர்ப்பம் என்று கிண்டல் செய்தார்கள். அவள் காத்திருந்தாள்.

வேறொரு பிரமுகர் வருவதாக இருந்தபோது அவளைக் கூப்பிட்டு அனுப்பிய போது அவள் மறுத்து விட்டாள். காரணம் கேட்டபோது கேலி செய்த நான்கு பெண்களின் பெயரைச் சொல்லி தனது நோட்டில் அவர்கள் திருமண வாழ்த்து எழுதியதைக் காட்டி அந்த நான்கு பெண்களைத்—தண்டிப்பதைவிட மாலை போடுகிற வேலையை அவர்களிடம் ஒப்படைப்பது இந்தக் கேலியை தடுக்க உதவும். மாலை போடுவதை சகஜமாக்க உதவும் என்று நிதானமாக பேசினாள். அவள் கூர்மையான புத்தி இப்படி பேச வைத்தது. பள்ளித் தலைமை அதிர்ந்து போனது.

பிரமுகர்கள் வருவதற்கு முன் அந்த நான்கு பெண்களின் கையில் மாலையை கொடுத்து மேடையில் நிற்கச் சொன்னது.

அந்த ஸ்டூடண்டை கேலி பண்ணீங்களாமே. கன்னா பின்னாவென்று பேசினீங்களாமே. இப்ப நான் உங்கள கேலி பண்ணட்டுமா. வாங்கடி கல்யாணப் பொண்ணுங்களான்னு சொல்லட்டுமா, ஏன் பேசாம இருக்கீங்க. சொல்லுங்கடி கல்யாணப் பொண்ணுங்களா. ஒலிப்



பெருக்கியில் பள்ளித் தலைமை குத்தி காட்டியது, பள்ளி மொத்தமும் பித்தளைப் பாத்திரங்கள் உருண்டது போல சிரித்தது.

''நீங்க மனசு சுத்தமான பெண்கள் இல்லை. அதனால தான் இப்படியெல்லாம் கேலி பண்ணியிருக்கீங்க. இப்படி பேசுறவங்க எப்படி வேணா நடந்துப்பாங்க. நீங்க வர்ற வங்க யாருக்கும் மாலை போட வேணாம். ஆனா பங்ஷன் முடியற வரைக்கும் இப்படியே நிக்கணும். பெண் குழந்தைகளை மாலை போடாம, பொக்கே கொடுக்க சொல்லுவோம். ஆனா இந்த மாதிரி அசிங்கமா பேசறதா தெரிஞ்சது நான் ரொம்ப பொல்லாதவளா இருப்பேன்.''

மூன்று மாதங்கள் பொறுமையாக இருந்து வெகு நிதானமாய் அவள் பழி வாங்கிய விதத்தை வெகு சிலரே புரிந்து கொண்டார்கள்.

அந்த நான்கு பெண்களும் மறுநாள் வகுப்பறையில் நுழைய வாங்கடி கல்யாணப் பொண்ணுங்களா...வகுப்பு கோரஸாய் கூப்பிட்டது. அந்தப் பெண்கள் விக்கி விக்கி அழ அவள் வலியப் போய் சமாதானம் செய்து கொண்டாள். அப்படி சமாதானம் செய்து கொண்டதையும் வகுப்பு டீச்சரிடம் சொல்லி பெருமைத் தேடிக்கொண்டாள். அவள் நினைத்தது போல் அவள் வகுப்பு டீச்சர் அதை வெளியே பரப்பினாள்.

''அவ அழகி மட்டுமில்லை ரொம்ப கெட்டிக்காரி. ரொம்ப நிதானம் சீக்கிரமே எல்லாம் புரிஞ்சு போச்சு. அவ பெரிய ஆளா வருவா பாருங்க'' எல்லா டீச்சர்களும் பேசிக்கொண்டார்கள். அது அவளுக்கு மிகுந்த தன்னம்பிக்கை கொடுத்தது.

வாழ்க்கை என்பது எப்போதும் விழிப்போடு இருத்தல். இடைவிடாது திட்டமிடுதல் அதைப் பதட்டமின்றி செயலாக்கல் என்பது அவளுக்கு புரிந்து போயிற்று.

அவள் மிகுந்த அழகியாகவும், சூட்சுமம் மிக்க பெண்ணாகவும் வளரத் துவங்கினாள்.

நான்கு எதிரிகளை ஒரே வீச்சில் வெட்டியது. அவளுக்கு மிகுந்த உற்சாகத்தை கொடுத்தது. அவளுக்கு இன்ஜினியரிங் கிடைத்தது. மருத்துவமும் கிடைத்தது. நோயுள்ளவர்களை எதிரிகளாக நினைக்க முடியாது. தன் முதுகில் குத்தும் குணத்துக்கும் கால் இடறும் கலைக்கும் ஆஸ்பத்திரி சரியான இடமாக இருக்காது என்று தோன்றியது.

தன் அழகின் மீது நம்பிக்கை வைத்து இன்ஜினியரிங் எடுத்துக் கொண்டாள். மெக்கானிக் பிரிவுகேட்டாள்.

நாற்பது மரங்களுக்கு நடுவே ஒரேயொரு பூங்கொடியாய் அந்த வகுப்பில் வளைய வந்தாள். போதிப்பவர்கள் அவளிடம் கருணை காட்டினர். பையன்கள் அவளை கையில் ஏந்தினர்.

சிவில் இன்ஜீனியரிங் படிக்கும் பெண்களோடு சினேகமாக இருந்து கொண்டு மெக்கானிகல் இன்ஜினியரிங் பையன்கள் முதுகில் சவாரி செய்தாள்.

அவள் அழகு அவளுக்கு எல்லா இடத்திலும் மரியாதையை வாங்கி கொடுத்தது. அவள் கெட்டிக்காரத்தனம் அவள் விரும்பியதை கைப்பற்ற வைத்தது. அப்படி அவள் கைப்பற்றிய ஒரு விஷயம்தான் பத்மநாபன். கூடப்படிக்கும் நாற்பது ஆண்களில் நம்பகமான ஆண் என்று அவனைத் தேர்ந்தெடுத்தாள். அவன் பின்புலத்தைப் புரிந்து கொண்டாள். நியாய தர்மங்கள் முக்கியம் என்று அவன் வளர்க்கப்பட்டதை தனக்கு சாதகமாக்கி கொண்டாள்.

பேச்சு சாமர்த்தியம் உள்ளவர்களிடம் தர்ம நியாயம் ரப்பர் டியூப் போல் வளையும், குழைந்த களிமண் போல் உருளும். பத்மநாபன் அவன் அறியாது அவளிடம் சிக்கி



னான். மதுமிதா, மதுமிதா என்று அவனைச் சுற்றி வந்தான். கவிதை எழுதினான்.

நாங்கள் இருவரும் நேகிக்கிறோம் என்பதை யாரிடமும் சொல்லாதே என்று அவளே பல பேரிடமும் சொன்னாள்.

அவளை விட அவன் ஆறுமாதம் சின்னவன் ஆனால் காதலுக்கு கண்ணுமில்லை. புத்தியுமில்லை. கனத்த உடம்பிருந்தது, அந்த உடம்பு ஏகப்பட்ட உபத்திரவம் செய்தது. வண்டி ஸ்டேஷனில் இருந்தவரை தொட்டுக் கொண்டிருந்தவள் வண்டி கிளம்ப ஆரம்பித்ததும் கட்டிக் கொள்ள ஆரம்பித்தாள். எல்லோருக்கும் தெரியும்படி அவனுக்கு கண்ஜாடை காட்டினாள். தன்னை பின் தொடர சொல்லிக் கட்டளையிட்டாள். லெட்ரினுக்கு அருகே உள்ள வராண்டாவில் கட்டிப்பிடித்து தொங்கினாள். இதழோடு இதழ் வைத்தாள்.

''இப்படியொரு நேரத்துக்காக எவ்வளவு நாள் காத்திருந்தேன் தெரியுமா?''

''முத்தம் கொடுக்கறதுக்காகவா.''

''இல்லை உன்கூட ஊர்சுத்திப் பார்க்கறதுக்காக.''

ரயில் பெட்டி முழுவதும் கல்லூரி மாணவர்களேயிருந்ததால் அவர்கள் கண்டு கொள்ளவில்லை.

அவர்களைத் தவிர மூன்று ஜோடிகளை கூட்டி வந்தாள். அடுத்த ஸ்டேஷனிலிருந்து டெல்லி வரை ஒரு முதல் வகுப்பு கூபே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். டெல்லி வருவதற்குள் ஆளுக்கு இரண்டு மணிநேரம் என்று அதை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த இரண்டு டிக்கெட்டிற்கான செலவை நான்கால் வகுத்து, நான்கு ஜோடிகளும் கொடுத்துவிட வேண்டும். நம் சந்தோஷத்திற்கு மட்டுமல்லாமல், நாம் குளிப்பதற்

கும் இயற்கை வசதிகளுக்கும் முதல் வகுப்பு மிக சவுகரியமான இடம்.

''முதல் வகுப்பு டி.ஆர். இதற்கு அனுமதிக்க மறுத்தால்'' ஒரு பெண் கேட்டது.

''எதற்காக நீ பெண்ணாய் பிறந்திருக்கிறாய். ஜிப்பை அவிழ்த்து கெஞ்சு.''

''யாருடைய ஜீப்பை அவிழ்த்து'' என்று கண் சிமிட்டலாய் கேள்வி வந்தது. வெடிச்சிரிப்பு எழுந்தது.

மதுமிதா தன் ஜெர்கினின் ஜிப்பை தொப்புள் வரை இழுத்தாள். கோணலாக நின்று கண் அடித்தாள். அவள் திரண்ட மார்பகத்தை பிரா மட்டுமே மறைத்துக் கொண்டிருந்தது. மற்ற பெண்கள் ஆடிப்போனார்கள்.

மரபு பற்றி கிஞ்சித்தும் கவலைப்பட்டாத ஒரு வீராங்கனையாய் அவள் அங்கே காட்சியளித்தாள்.

''அவ காமிக்கிறா இல்லை, நீ காமி. அவ அவ ஆளை கிஸ் அடிக்கிறா இல்லை. நீ கொடு. அவஅவ ஆளோட பர்ஸ்ட் கிளாஸ்ல படுத்துட்டு தலை கலைஞ்சி வந்தா இல்ல. நீயும் வா?''

மரபு மீறுதல் மெல்ல, மெல்ல பரவும். ஒருத்தி கோடு தாண்டினால் போதும் ஒவ்வொருவராய் தாண்ட ஆரம்பிப்பார்கள். மரபு தாண்டும்போது அடிபடாமல் தாண்ட வெகு சிலருக்கே முடியும். கூபேயில் அவர்கள் தான் முதல் முதலாக நுழைந்தார்கள். கதவை மூடிக் கொண்டதும் வெறிபிடித்தவள் போல அவனை முத்தமிட்டாள். கட்டிப் புரண்டாள்.

பெண் மீது ஆசை மட்டும் இருந்து ஞானம் இல்லாத ஆள் போரிடத் தெரியாத மன்னன் போல. ஆளத் தெரியாத அரசன் போல. பெண்ணை ஆளுமை செய்தல்



என்பது உடம்பு உரத்தால் அல்ல. புத்திமானே பலவான் என்பது பெண் ஆளுமையில் முக்கியமான விஷயம்.

பெண்ணை ஆளுமை செய்ய பெண்ணைப் புரிந்து கொள்ள வேண்டும். பெண்ணைப் புரிந்து கொள்ள பெண்ணின் அண்மை வேண்டும். பெண்ணோடு பழகி, பெண்ணால் பாதிக்கப்படாத அனுபவம் யாருக்கு கிடைக்கும். பெண்களுக்கு நடுவே வாழ்ந்து பெண்கள் மீது ஆசைப்படாத குணமுள்ளவனுக்கே கிடைக்கும். இதற்கு மிகுந்த புலனடக்கம் வேண்டும், புலனடக்கம் கெட்டிக்காரர்களுக்கே முடியும்.

கெட்டிக்காரத்தனம் என்பது படிப்பு சாமர்த்தியம் அல்ல. மொழி வலிமை அதிகரித்துக் கொள்வது அல்ல. அது கணிதமேன்மையோ, காசு சம்பாதிக்கிற சாமர்த்தியமோ அல்ல. மனிதர்களை உற்றுப் பார்க்கும் மிகுந்த நிதானமே கெட்டிக்காரத்தனம். அவர்களுடைய குணாதிசயங்களை கிரஹித்து புரிந்து கொள்வதே கெட்டிக்காரத்தனம்.

மனிதர்களோடு வாழ்பவன் மனிதர்களை புரிந்து கொள்ளாமல், வேறு என்ன புரிந்துகொண்டு வெற்றி பெற முடியும். இந்த பூமியின் பிரச்சினையே மனிதன் மனிதனை புரிந்து கொள்ளாததுதான்.

இதில் பெண் ஆணால் பாதிக்கப்படுவதும், ஆண் பெண்ணால் பாதிக்கப்படுவதுமே அதிகம் நடக்கிறது.

பத்மநாபன் திக்குமுக்காடிப் போனான். மதுமிதா அவனை இழுத்து மடியில் போட்டுக் கொண்டாள். உறுதியான மார்பகங்களில் அவன் முகத்தை அழுத்திக் கொண்டாள். குடிசையை பீரங்கியால் தாக்குவதுபோல அவள் விளையாட்டுகளால் அவனைத் தாக்கினாள்.

''எதாவது தப்பு நடக்கப் போவுது மதுமிதா'' பத்மநாபன் பெண் மனம் கொண்டவனாய்ப் பேசினான்.

''எதுக்கும் பயப்பட வேண்டாம். நான் எல்லாத்துக்கும் தயாரா இருக்கேன்'' மதுமிதா ஆண் மனம் கொண்டவளாய் அவனுக்கு உறுதி சொன்னாள்.

வாழ்க்கை இப்படித்தான் சில சமயம் மேல் கீழாய் போய் வருகிறது.

''எல்லாத்துக்கும் தயாரான்னா என்ன அர்த்தம்?''

''உங்கூட சந்தோஷமாயிருக்கணும்னே நான் முன்னெச்சரிக்கையா வந்துருக்கேன். என்ன முன்னெச்சரிக்கைன்னு கேட்காதே. சொல்ல மாட்டேன். நீ என்னை எப்படி வேணா யூஸ் பண்ணிக்கலாம். எனக்கு பயமே இல்லை.''

ஆனால், அவள்தான் அவனை உபயோகப்படுத்திக் கொண்டாள். அடுக்கடுக்காய் கட்டளைகள் இட்டு அதன்படி நடக்கச் சொன்னாள்.

அரைமணி நேரத்துக்குள் இரண்டு பேரும் அலுத்தார்கள்.

''நான் உனக்கு என்னையே கொடுத்திருக்கேன், பத்து. நீ எனக்கு என்ன தரப்போறே?'' அரை மயக்கத்திலும் அவள் தெளிவாகக் கேட்டாள்.

''உனக்காக நான் உயிரையும் கொடுப்பேன் மதுமிதா'' அவன் முழு மயக்கத்தில் உறுதியாய் சொன்னான்.

அடுத்த ஜோடியை முதல் வகுப்பில் அனுப்பிவிட்டு அவர்கள் இரண்டு பேரும் இரண்டாம் வகுப்புக்கு வந்தார்கள். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் இறங்கி ஓடி விளையாடினார்கள்.

முதல் வகுப்பில் ஏறி ஷாம்பு போட்டுக் குளித்துவிட்டு அன்றலர்ந்த பூவைப்போல் டெல்லியில் இறங்கினார்கள்.



''எவ்வளவு காசு வைச்சிருக்கே பத்து'' அவள் கேட்டாள்.

அவன் மொத்தமும் கணக்குப் போட்டுவிட்டு ஐயாயிரத்துச் சொச்சம் என்று சொன்னான்.

''சரி எடுக்காத. போவும்போது அம்மாவுக்கு எதாவது வாங்கிட்டுப் போ.''

''ஏய்... உனக்கெதாவது வாங்கி தரேனே'' அவன் கெஞ்சினான்.

''வாங்கணும் டெல்லியில மரக்கட்டில் எல்லாம் நல்லாயிருக்கும். தொட்டில் மாதிரி ஆடற ஒரு ராஜஸ்தான் கட்டில் வாங்கப் போறேன்.''

''என்ன விலையிருக்கும்?''

''பன்னிரெண்டாயிரம் ரூபாய்''

அவன் எச்சில் முழுங்கினான்.

''காசு கொண்டு வந்திருக்கிறாயா?'' அவன் அடிக்குரலில் கேட்டான்.

அவள் கைப்பையைத் தூக்கிப்போட்டாள். அதில் அறுநூறு ரூபாய் இருந்தது.

''இவ்வளவுதான் காசு இருக்கா'' வியந்தான்.

அவள் பெட்டியின் அடிப்பாகத்தை திறந்து காட்டினாள். முப்பத்தி ஏழாயிரம் ரூபாய் காசு பரப்பி வைக்கப்பட்டிருந்தது. அவன் வாய் அடைத்துப் போனான்.

''இவ்வளவு காசு எதற்கு?''

''இஷ்டப்பட்டதை வாங்கிக்கச் சொல்லி அப்பா கொடுத்தார்.''

அவனுக்கு நெஞ்சு திடுக்கிட்டு போயிற்று. இருபத்திநாலு மணி நேரம் கழித்து மெல்ல கேட்டான்.

''இவ்வளவு காசு இருக்கிற நீ என்னை ஏன் லவ் பண்றே?''

''ஏன் காசு காசைதான் லவ் பண்ணனுமா? காசு காசை காதலிச்சா காதல் காணாம போயிடும். காசு தான் மிஞ்சும்.''

''அப்போ காசுள்ளவங்க ஏழையை காதலிச்சா காதல் நிக்குமா?''

''அப்படித்தான் நினைக்கிறேன்.''

''காசு முக்கியமில்லைன்னு வர பொண்ணை காதலிக்கிறது தப்பா. காதல் என்கிற விஷயத்துக்கு நடுவே காசே இல்லை.''

''அப்படிச் சொல்லக்கூடாது பத்து, காசு இல்லாம எதுவுமேயில்லை. காதல் உள்பட எல்லா விஷயத்துக்கும் காசுதான் அடிப்படை. காசு இல்லாட்டி எதுவுமே நடக்காது.''

''என்கிட்ட காசு இருக்கு. அதே சமயம் என் காசையும், என்னையும் யாராவது சரியா காவல் காக்கணுமேன்ற கவலையாவும் இருக்கு. அதாவது எனக்கு நல்ல கணவன் வேணுமேன்ற ஆசையிருக்கு. அவன் நல்லவனா இருக்கணும். நான் சொல்றபடி கேக்கணும். நான் சொல்றபடி கேட்டா எனக்கும் நல்லது. அவனுக்கும் நல்லது. நான் பேசறது ரொம்ப திமிரா படறதா பத்து''

''இல்லை. இதிலயும் ஒரு அர்த்தம் இருக்கு''

''ஆனா யாரும் புரிஞ்சுக்க மாட்டேன்றாங்க. என்னை ஆத்திரக்காரியா நினைக்கிறாங்க. என் அப்பாவையும், அம்மாவையும் பார்த்த பிறகு எனக்கு கல்யாணத்தைப் பத்தி பயம் வந்திருக்கு. நல்ல புருஷன் வரணுமேன்னு கவலையா இருக்கு. எனக்கு நல்ல புருஷன் வந்தால்தானே



எங்கம்மாவும் வயசு காலத்தில் நிம்மதியா இருக்கமுடியும் அவங்களும் கவலைப்படறாங்க.''

''என்கிட்ட என் காசா எவ்வளவு இருக்கு தெரியுமா? அறுபத்து மூணு லட்ச ரூபாய், வெறும்ன பேங்க்ல போட்டுட்டு சாப்பிட்டுட்டு இருக்கலாம். இல்லை கெட்டிக்காரத்தனமா இன்வெஸ்ட் பண்ணி லாபம் சம்பாதிக்கலாம். என்னால நல்லா பிஸினஸ் பண்ண முடியும். எனக்கு தேவை ஒரு கம்பானியன். நல்ல புருஷன். என்னை உனக்கு புடிச்சிருக்கா பத்து. என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா?''

பத்பநாபன் எந்தப் பதிலும் சொல்லாமல் அவள் கைகளை சேர்த்து இறுக்கினான். அவனுக்குப் பயமாகவும் இருந்தது. சந்தோஷமாகவும் இருந்தது.

''அடேங்கப்பா...அறுபத்தி மூணு லட்சம். அழகான பெண். எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம்'' என் மனசு கணக்குப் போட்டது. அதே சமயத்தில் இனம் புரியாத ஒரு பயமும் எழுந்தது.

நான் இருக்கிறேன் மதுமிதா என்று சொல்ல முடியாமல் வாயடைத்தது. எங்கோ எதுவோ நெருடிற்று. மிகவும் திட்டம் போட்டு தன்னைப் பிடித்திருக்கிறாளோ என்று தோன்றிற்று. அவள் கொடுத்த முத்தங்களும், உடம்பில் செய்த விஷமங்களும் தன்னை கணவனாக அடையத்தானே என்ற எண்ணம் வந்தது. அம்மாவுக்கு இது பிடிக்குமா என்கிற பயம் வந்தது. இவளுக்கு அம்மாவை பிடிக்குமா என்ற கேள்வி வந்தது.

''எங்கம்மாவை பார்த்ததும் ஏன் ஓடிப்போயிட்டே?''

''ஒரு பயம்தான்.''

''என்ன பயம்??'

''உங்க அம்மா ரொம்ப உத்துப் பார்க்கிறாங்க.''

''அதனால என்ன?''

''ஆளை எடை போடறாங்க. தூரத்தில நின்னுகிட்டே நீ என்ன பண்றே யார் கூடப் பேசுறேன்னு பார்க்கிறாங்க.''

''தூரத்துல நின்னுகிட்டேவா. அது எங்கம்மான்னு எப்படித் தெரியும்?''

''இதுக்கு முன்னாடி ரெண்டு தடவை பாத்திருக்கேன்.''

''எப்போ?''

''நீ இல்லாதபோது ரெண்டு தடவை உன் வீட்டுக்கு வந்தேன்.''

''நீ சொல்லவேயில்லையே... எங்கம்மாவும் சொல்லலியே.''

''சும்மா உங்க வீடு எப்படியிருக்குன்னு பார்க்கத் தான் வந்தேன். சோப் சேல்ஸ் பண்ற பொண்ணு மாதிரி எட்டிப் பார்த்துட்டுப் போயிட்டேன்.''

''எதுக்கு அப்படி வரணும்?''

''உன் வீடு எப்படியிருக்குன்னு பார்க்கறதுக்காக.''

''என்கிட்டே நேரா கேட்டிருக்கலாமே?''

''நான் அப்ப உன்ன லவ் பண்ணலையே?''

''என் வீட்டுச்கு வர்றதுக்கு என்னை லவ் பண்ணனுமா. சாதாரணமா வரலாமில்லே...''

''நான் சாதாரணமாத்தான் வந்தேன். நீ இருந்தா ஹலோன்னு சொல்லியிருப்பேன். உங்க அம்மா மட்டும்



தான் இருந்தாங்க. அதனால சோப்புசேல்ஸ் அப்படின்னு சொல்லிட்டேன்.''

''ஏன்?''

''உங்கம்மா மூஞ்சியப் பார்த்தா அப்படி சொல்லனும்னு தோணிச்சு அவங்க நோண்டி நோண்டி கேக்கிறவங்கன்னு பாத்தவுடனே தெரிஞ்சு போயிடுச்சு. அதனாலதான் ஒதுங்கிட்டேன். நீ யாரு... என்ன... ஏன் வந்தே என் புள்ளை எத்தனை நாளா பழக்கம். அறுத்தெடுப்பாங்க.'' மதுமிதா தோளைக் குலுங்கிக் கொண்டான்.

பத்மநாபனுக்கு முதன் முதலாய் அவளைப் பற்றி ஒரு பயம் வந்தது.

ஆனால் யாரையும் மோசம் என்று தீர்மானம் செய்யும் முன் யோசிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

நேற்று இரவு ரயிலில் கட்டிப் புரண்டவள் இன்று என்ன செய்வாள், யோசனை செய்தான்.

அன்று இரவு யமுனை நதிக்கரையில் கூடாரம் அடித்து தங்கினார்கள். தீ வளர்த்து ஆட்டம் ஆடினார்கள். விஸ்கியும் பிராந்தியும் குடித்து விட்டு தள்ளாடினார்கள். தேவையில்லாது பேய்க் கூச்சல் போட்டார்கள்.

தலையை விரித்துப் போட்டபடி கண்கள் சிவக்க உடம்பு முழுவதும் போர்வை போர்த்தியபடி, லேசான மதுவின் நெடியோடு மதுமிதா வந்து நின்றாள். போர்வையை வீசி எறிந்துவிட்டு ஜரிகை ஜாக்கெட்டும் சாட்டின் பாவடையுமாய் நின்றாள். பவர் ஸ்டீரியோவில் பிளிறிய பாட்டுக்கு இடுப்பு அசைத்து நடனமாடினாள். பக்கத்தில் ஆட வந்தவன் முகத்தில் கால் வைத்து தள்ளினாள். அத்தனை ஆண்களும் கிறங்க எல்லோரையும் தொட்டுத் தடவிக்கொண்டு போனாள்.

இவள் அம்மாவுக்கு சரிப்படுவாளா என்று பத்மநாபன் யோசித்தான்

பவர் ஸ்டீரியோ அடிப்பட்ட பேய் போல கதறியது. இழவு வீட்டில் பிணம் தூக்கும் போது ஏற்படும் அழுகை ஒலிபோல பாட்டு இருந்தது. ஏதோ ஒரு பழங்குடியினம் போருக்கு தயாராவது போல வாத்தியங்கள் முழங்கின, இந்த ஒலிகளை கேட்கிற எவராலும் அமைதியாக உட்கார்ந்திருக்க முடியாது. ஆவேசம் வரத்தான் செய்யும். எந்த அர்த்தமும் இல்லாத ஆவேசம் அது. ஆவேசப்பட வேண்டும் என்பதற்காக ஆவேசப் பட வைக்கும் விஷயம் அது.

பொழுது போகாமல் மது அருந்துகிறவர்களைப்போல், வேலையற்று கிடப்பவர்களை ஆவேசப்படுத்தும் பாட்டு அது.

இந்த ஆட்டத்திற்குப்பிறகு எந்தவிதமான தெளிவும் வரப்போவதில்லை. இந்த ஆட்டம் இந்தப்பொண்ணுக்கு எந்த மதிப்பையும் தரப்போவதில்லை. எல்லா ஆண்களும் ஆடியவளை வெறித்துப் பார்த்தாலும் எவனும் அவளை விரும்பவில்லை. யாராலும் அவள் நேசிக்கப்படவில்லை. மாறாய் இன்று இரவு அவள் படுக்க வந்தால் நன்றாக இருக்குமே என்றுதான் அனைவரும் நினைத்தனர்.

ஆண்களின் இந்த ஆசையை தன்னுடைய கௌரவமாக எந்தப் பெண்ணாவது கொள்ள முடியுமா. அது உண்மையான மரியாதைதானா.

ஆனால் மதுமிதாவின் ஆட்டம் அத்தனை ஆண்களையும் முழங்கால் மடிப்பில் வைத்து நசுக்கிவிடுவேன் என்று இருந்தது. அதில் மிகப்பெரிய நம்பிக்கை தெரிந்தது.

மதுமிதாவின் ஆட்டத்தை வியந்து பார்த்த கணத்தில் உலகம் முழுவதும் வியந்து பார்க்கின்ற ஒரு தன்மையை



யும் பத்மநாபன் அடைந்தான். ஆட்டம் முடிந்ததும் அவள் சரேலென்று பாய்ந்து அவன் மடியில் விழுந்தாள். வியர்வை பொங்கும் உடம்பை பத்மநாபன் அணைத்துக் கொண்டான். மற்ற ஆண்கள் பொறாமைப் பட்டார்கள் குடிப்பதற்கு இன்னும் எதாவது வாங்கி வருகிறேன் என்று அவனோடு கிளம்பினாள். ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்குள் காசு வீசிவிட்டு உள்ளே புகுந்தாள். அவனை ஒருநாய்க்குட்டி போல கைப்பிடித்து அழைத்துச் சென்றாள் மீண்டும் சிறிது மது அருந்தினார்கள்.

உடம்பு வேட்கையோடு ஒருவர் மீது ஒருவர் விழுந்து அனுபவித்தார்கள். அங்கும் அன்பைவிட ஆவேசமே இருந்தது. தன் பலத்தை நிரூபிக்கும் ஆத்திரமே இருந்தது. படிப்பைச் சார்ந்த விஷயமோ அவர்கள் கண்படிப்போ, படிப்பைச் சார்ந்த விஷயமோ அவர்கள் கண்ணுக்குத் தெரியவேயில்லை அவ்வப்போது தன் குழுவோடு சேர்ந்து கொண்டு, அவ்வப்போது பிரிந்து ஒதுங்கினார்கள். மதுமிதாவின் முழு கட்டுப்பாட்டில் பத்மநாபன் இருந்தான். வண்டி சென்ட்ரலில் நின்றபோது மதுமிதா வேண்டுமென்றே ஞாபகப்படுத்தினாள்.

''உங்கம்மாவுக்கு ஒன்னும் வாங்கிட்டுப் போகலையா?''

அம்மா ஞாபகம் அப்போதுதான் வந்தது.

''பரவாயில்லை. ஏதாவது மெட்ராஸிலேயே வாங்கிட்டு டெல்லியில வாங்கினேன்னு சொல்லிடு.''

அம்மாவுக்கு பித்தளையில் செய்த ஓம் ஒன்று காதி கிராமோத்யோக் பவனில் வாங்கிக் கொண்டான். அவள் என்ன சொன்னாலும் கேட்க தயாராக இருந்தான். மதுமிதாவைத்தவிர அவனுக்குள் எந்த நினைவும் இல்லை எவர் நினைவும் இல்லை, அவள் உடம்பைத் தவிர வேறு எந்த விஷயமும் மனதில் பதியவில்லை. அவள் இருந்த போதும், இல்லாத போதும் அவளைப்பற்றியே யோசனை

வந்தது. இவன் உடம்பு முழுவதும் படர்ந்திருப்பது போலவே எந்நேரமும் தோன்றியது. உடம்பு மீது, ஒரு உடம்பு பட்ட உஷ்ணத்தில் ஒரு சோர்வு ஏற்பட்டது.

சாப்பிடுகிறபோது, காமம் ஏற்பட்டு சாப்பிடுவதை குறைக்க வைத்தது, கையில் புத்தகம் விரித்தபடி நின்றாலும் மனம் எங்கோ இருந்தது. கடுமையான ஞாபக மறதி ஏற்பட்டது.

பல் தேய்க்க பாத்ரூமுக்குள் போய்விட்டு பல்லே தேய்க்காமல கண்ணாடியில் முகம் பார்த்துவிட்டுத் திரும்பினான். அப்படி கண்ணாடியில் தன் முகம் பார்த்த போதும் அவனோடுதான் பேசினான்.

(காமம் தோய்ந்த காதல் மிகவும் மயக்கமான ஒரு நிலை. புருஷன் மனைவிக்குள்ளும் காமம் உண்டு. ஆனால், அதில் எந்த மயக்கமும் இல்லை. கைகட்டிய தூரத்தில் மனைவியும், எப்பொழுது வேண்டுமானாலும் பெறலாம் என்று கணவனும் இருக்க அங்கே எந்த கனவு களும் இல்லை.

ஆனால், கள்ளத்தனத்தில் கனவுதான் முதல் அறுவடை, எனவே நிஜ வாழ்க்கை காணாமல் போய் விடுகிறது. கண் மூடிக்கொண்டு ஓடுகிற கதையாய் போய் விடுகிறது.)

அம்மாவுக்கு ஒரு வாரம் ஒன்றும் புரியவில்லை. நிலைக்கண்ணாடி முன் நின்று அவன் கம்பீரமாய் பேசுவதைப் பார்த்து சிரித்தாள். பிறகு பயந்தாள். ஒரு வெள்ளைப் பேப்பர் தேடி அவன் நோட்டுப் புத்தகத்தை புரட்டியபோது சில ஓவியங்களைப் பார்த்து திகைத்துப் போனாள்.

மல்லாந்து படுத்துக்கிடக்கிற பெண், மாடு போல் கையூன்றி இருக்கின்ற பெண் கால் தூக்கி நிற்கின்ற பெண் கை தூக்கி சோம்பல் முறிக்கின்ற பெண், சுருண்டு படுத்துக் கொண்டிருக்கிற பெண். அகட்டித் தூங்குகின்ற பெண் என்று பல வரைகோட்டு நிர்வாணப் படங்கள் இருந்தன.



(காமம் இயல்பு. காளை மாடு பருவம் வந்தால் கால் மாற்றி தவிப்பது இயற்கை. ஆனால், கட்டுத்தறியை அறுத்துக் கொண்டு காளை மாடு ஓடாமல் இருக்கவேண்டும்.)

மது...மது...மது...என்று இங்கிலிஷிலும், இந்தியிலும், தமிழிலும் எழுதப்பட்டிருந்தது.

மது என்ற வார்த்தைக்கு காதல் மயக்கம், என்ற அர்த்தத்தை பத்மநாபனின் அம்மா எடுத்துக்கொண்டாள். அது ஒரு பெண்ணின் பெயர் என்று அவளுக்கு தெரிய வாய்ப்பில்லாமல் போயிற்று. பருவ வயதில் இது இயல்பு இதைத் தாண்டாது எந்த ஆணும், பெண்ணும் வயதானதில்லை இந்த மாதிரி உடம்பு ஆத்திரத்திற்கு கீரை நல்லது. சக்தி விசயத்தை ஈடுகட்ட வைட்டமின் மாத்திரைகள் சிறந்தது. மனம் அமைதி அடைய தியானம் நல்ல வழி.

அம்மா கீரை போட்டபோது வேண்டாம் என்று ஒதுக்கினான். மேஜையில் மாத்திரை வைத்தபோது உண்ண மறந்து போனான். தியான வகுப்புக்கு போகச் சொன்னபோது சீறி விழுந்தான்.

பத்மநாபனின் அம்மா பயப்பட்டாள். பிள்ளையை வேவு பார்க்க விரும்பினாள். எங்கேயோ பெரிய தவறு நடந்து கொண்டிருக்கிறது என்று அவள் உள்ளுணர்வு சொன்னது. விடியற்காலை கனவுகள் எச்சரித்தன. பெரிய பானைக்குள் அவள் பிள்ளையை வெட்டிப் போட்டு சமைத்துக் கொண்டிருப்பதாய் ஒரு கனவு வந்தது.

ஐந்து வயது பையனாக அவன் அருகே நடந்துவந்த போது ஒரு கோயில் பிரகாரத்தில் மிகப் பெரிய வௌவால்

அவனைக் கொத்திக் கொண்டு போனது. வௌவால் பையனின் காலைக் கவ்விக் கொண்டு தலைகீழாய் தொங்கிற்று. பையன் அலறினான். பத்மநாபனின் அம்மா செய்வதறியாது திகைத்து நின்றாள்.

ஆனால் இந்த வயதுப் பையன்களிடம் மிக மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தான் காதலிப்பது யாருக்கும் தெரியக்கூடாது என்று இவர்கள் நினைப்பார்கள். அதே சமயம் ஊரில் உள்ள அத்தனை பேரும் அறிய இவர்கள் காதலிப்பார்கள். அதுபற்றி என்ன கேட்டாலும் ஏதாவது பொய் கலந்துதான் பதில் சொல்வார்கள்.

இதில் மிக மோசமானவர்கள் தங்கள் காதலைப்பற்றி தங்களுக்கே குழப்பமானவர்கள். அடிமனதில் காதலிக்க வேண்டாம் என்று தீர்மானம் கட்டும் அதே சமயம் காதலிப்பதைவிட முடியாமலும் இருப்பவர்கள் ஆபத்தானவர்கள்.

பத்மநாபன் கிட்டதட்ட இந்த நிலையைத்தான் அடைந்து கொண்டிருந்தான். மதுமிதா ஒவ்வொருநாளும் ஒரு அதிசயம் காண்பித்தாள். ஒவ்வொரு நாளும் ஒரு அவதாரம் எடுத்தாள்.

கல்லூரியில் இரண்டு கட்டிடங்களுக்கு நடுவே ஒரு குடிநீர்க் குழாய் போயிற்று. மூன்றுமாடி உயரத்திலிருந்த அந்தக் குழாய்மீது சுமார் நாற்பது அடி நீளத்திற்குநடந்து காட்டுவதாக சவால் விட்டாள். அப்படி யாரும் நடக்கக் கூடாது என்று கல்லூரி தடை விதித்தது.

பகலில்தானே தடைவிதித்து காவல் போடுவார்கள். இரவு பன்னிரெண்டு மணிக்கு நடக்கிறேன் என்று சொன்னாள்.

நிலவொளியில் கையில் இரண்டு பூங்கொத்தை வைத்துக் கொண்டு அந்தக் குழாயில் குறுக்கும், நெடுக்குமாய் மூன்றுமுறை நடந்து காட்டினாள்.



எந்த ஆண் பிள்ளையாவது நான் செய்ததுபோல் செய்வானா, எவனுக்காவது துணிச்சல் உண்டா, அட கேவலமான ஜந்துகளே... ஒருவனுக்கு கூட இந்த தைரியம் இல்லையா. நான் உங்களைக் கடந்து போகும்போது உங்கள் முன்புறத்தை இரண்டு கையாலும் பொத்திக் கொண்டு போங்க'' என்று கூச்சலிட்டாள்.

டூல் டிசைன் வரைவதில் தங்கப்பதக்கம் வாங்கினாள்.

திடீரென்று காலேஜ் காம்பவுண்டில் பத்துஹாஸ்டல் பெண்களோடு உண்ணாவிரதம் இருந்தாள். லேடீஸ் ஹாஸ்டலில் போதை மருந்து எடுத்துக்கொள்வதாக ஆண்கள் ஹாஸ்டலிலிருந்து பிரின்ஸ்பாலுக்கு கடிதம் போயிருக்கிறது. கடிதம் எழுதிய நான்கு பேர் யார் என்று எங்களுக்குத் தெரியும். அவர்கள் மன்னிப்பு கேட்கும்வரை உண்ணாவிரதம் தொடரும் என்று அறிவித்தாள்.

மூன்று நாட்கள் உண்ணாவிரதம் இருந்தாள். ரகசியமாக மன்னிப்பு கேட்டு விட்டார்கள் என்று உண்ணாவிரதத்தை நிறுத்தினாள். வெற்றி...வெற்றி...என்று வலம் வந்தாள்.

ஏன் இப்படி உடம்பைக் கெடுத்துக்கறே என்று தனியே கூப்பிட்டு பத்மநாபன் கடிந்து கொண்டபோது வாய்விட்டுச் சிரித்தாள்.

''சின்னப்பையா நீ அம்மாகிட்டப் போய் பால்குடி'
ஒரு பத்துபேரு ஸ்லிம்மாகணும்னு நினைச்சோம். அதுக்
காக மூணு நாள் லிக்குவிட் டயட்ல இருந்தோம். ரெண்டு
மணி நேரத்துக்கு ஒரு தடவை கீரை சூப், அரிசி கஞ்சி,
நீர் மோர் எதாவது ஒண்ணு மாத்தி ஒண்ணு சாப்பிட்
டோம். இப்ப உடம்பு எப்படித் தெரியுமா இருக்கு.
இப்ப சிறகு மாதிரி இருக்கு.''

''அப்ப லேடீஸ் ஹாஸ்டல்ல டிரக் பொய்யா.''

''நிஜம். போர் அடிச்சதுன்னா வட்டமா உட்கார்ந்து சிலும்பில கஞ்சா அடிப்போம். பச்சை வாழைப்பழம் உறிச்சு சாப்பிட்டு எதாவது உளறிட்டிருப்போம், இந்த மூணுநாள் பட்டினி கிடந்ததுல கஞ்சாவால வந்த பிரச்சனை ஓடியே போச்சு.''

''தேவையில்லாத மென் ஹாஸ்டல எதுக்கு இழுத்த. அவங்களை ஏன் டீஸ் பண்றே...''

''ஆயிரக்கணக்கான வருஷமா ஆம்பளைங்க பொம்பளைங்கள டீஸ் பண்ணலை... அவங்கள அடிமையா நடத்தல...அதான்.''

''உனக்கென்ன பைத்தியமா புடிச்சிருக்கு. இப்படியெல்லாம் செய்தா நான் உன்னைவிட்டு நகர்ந்துடுவேன்''

''போயேன். நீ இப்படி பேசின உடனே உன் கால்ல வுழுந்து அழுவேன்னு பார்த்தியா. என்னைப் பிரியவேண்டாம் பிராணநாதா அப்படின்னு டயலாக் சொல்லுவேன்னு நினைச்சியா. அதுக்கு வேற ஆளைப்பாரு. நீ இல்லைன்னா வேறொருத்தன். என் பின்னாடி நாய் மாதிரி சுத்தறதுக்கு ஆயிரம் பேர் இருக்கான்.''

கடும் கோபமாகி பத்மநாபன் அவளை அடிக்க கை ஓங்கினான்.

''எம்மேல் அடிபட்டுது...இதான் உன் வாழ்க்கையில் கடைசி நாள். பதிலுக்கு நான் அடிக்கமாட்டேன். கொலை பண்ணுவேன். உன் கொட்டை ரெண்டையும் அடிச்சு தரையோட தேய்ப்பேன். தைரியமிருந்தா அடிடா பார்ப்போம்.'' அவள் அவனை நோக்கி வெறியோடு முன்னேறினாள். அவன் பின் வாங்கினான்.



''இனிமே உன்னை நான் லவ் பண்ணப் போறதில்லை. இத்தோட போறும்.'' என்று வெறுத்துப் பேசினான்.

''போ...போய் உங்கம்மாகிட்ட பால் குடி. அந்த
பொட்டை நாய்கிட்ட பால்குடி'' அவள் வாய்விட்டு
ஆங்கிலத்தில் கத்தினாள். பலபேர் அவள் கூச்சல்
கேட்டுத் திரும்பி பார்த்தார்கள்.

''என்னை லவ் பண்ணிட்டு வேற எவளையும் தொட
நான் விட மாட்டேன். என் உடம்பை அனுபவிச்சுட்டு
இன்னொருத்தியை கல்யாணம் பண்ணிக்கலாம்னு பாக்க
றயா அது நடக்காது.'' கண்டபடி கத்திக் கொண்டு
போனாள். கல்லூரி அதை வேடிக்கை பார்த்தது.

அவன் வகுப்பு தோழன் மெள்ளத் தோளில் கை போட்டு பேசினான்.

''பேய்க்கு வாழ்க்கைப் பட்டா புளிய மரம் ஏறித்
தான் ஆவணும்னு சொல்வாங்க, அது தப்பு. நீ புளியமரம்
ஏற வேண்டிய அவசியமில்லை. பேயே உன்னை இழுத்து
கிட்டு புளியமரம் ஏறும். உன்னை தலைகீழா தொங்க
விடும். கதற கதற அடிக்கும்.''

''ஆம்பளை கையை எடுத்து மார்ல வைச்சுக்கிற
பொம்பளைகிட்ட ஜாக்கிரதையா இருக்கணும். உன்
னோட அழகப் பார்த்தவுடனே ஏற்படற தாங்க முடி
யாத காதல் அப்படின்னு நினைச்சுக்காத. பெண்ணால
எதையும் அடக்கிக்க முடியும். எந்த நேரத்திலயும் அடக்
கிக்க முடியும். அழுகை, பசி, காதல். காமம், வேதனை,
துக்கம், பரபரப்பு எல்லாத்தையும் அடக்கிக்க முடியும்.
உன்னால முடியாது. எந்த ஆம்பளையாலும் முடியாது.
''ஒரு ஆண் பெண் தன்மை கொள்ளுகிற போதுதான்
புலனடக்கம் எளிதாகிறது. நீ ரொம்ப ஜாக்கிரதையா

இருக்க வேண்டிய நேரம். உங்கம்மாவ நான் பார்த் திருக்கேன். உண்மையான பெண்மணி. ரொம்ப உயர் வான பெண்மணி. இந்த நாய்கிட்ட மாட்டிண்டு அவளை மறந்துடாத.''

ஒரு கந்தர்வன் தரையிறங்கி ஆசீர்வாதம் செய்தது போல் உடன் படிக்கும் தோழன் சொல்லிவிட்டுப் போனான்.

அவன் பேச்சு எங்கோ தைத்தது.

பலமுறை அவள் வந்து பேசிய போதும், மன்னிப்பு கேட்டபோதும் அவன் பேச மறுத்துவிட்டான். அவன் சட்டையில் இங்க் ஊற்றியபோது கோபித்துக் கொள் ளாமல் நகர்ந்து விட்டான். பலமுறை வெறுப்பேற்றிய போதும் தலை குனிந்தபடி அப்பால் போய் விட்டான்.

மறுபடியும் குழாயில் நடக்கப்போவதாக அவள் அறி விப்பு செய்தாள். ஒருமுறை அல்ல. இருமுறை அல்ல. உண்மை வெளியே வரும்வரை அவள் நடக்கப்போவதாக அறிவிப்பு செய்தாள். தன்வாழ்வை வஞ்சித்தவன் தன்னை. ஏற்றுக் கொண்டால் ஒழிய தான் இறங்கப்போவதில்லை என்று சுற்றறிக்கையில் எழுதியிருந்தாள்.

காலேஜ் டைரக்டருக்கு சுற்றறிக்கையில் ஒரு பிரதி போயிற்று. நான் இதை எழுதவேயில்லை என்று சத்தியம் செய்தாள், தன்னை மாடியிலிருந்து தள்ளிக் கொல்வதற்கு யாரோ ஒருவர் முயற்சிக்கிறார் என்ற உணர்வு அடிக்கடி வருகிறது என்றாள்.

நிர்வாகம் பலபேரை விசாரித்து விட்டு பத்மநாபன் சட்டையையும் பிடித்துக்கொண்டது. படிப்பும் ஒழுங்காக இல்லை. நடவடிக்கையும் ஒழுங்காக இல்லை. காலேஜிற்கு கெட்டப்பெயர் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினால்



வாழ்க்கை ஒழுங்காக இராது என்று பத்மநாபன் பயமுறுத் தப்பட்டான்.

பத்மநாபனுக்கு வேறு வழி தெரியவில்லை. அம்மா வின் உதவியை நாடினான். சகலமும் கொட்டினான். அம்மா அதிர்ந்து போனாள்.

குத்துவிளக்கை ஏற்றி சாமி படத்துக்கு முன்னால் சமனமிட்டு உட்கார்ந்து கொண்டாள். மூச்சை உள்ளிழுத்து வாங்கி தியானம் செய்தாள். கண் திறந்து எழுந்தாள்.

''அவளை நான் பார்த்துக்கறேன் விடு. பொம்ப ளையை பொம்பளையாலதான் அடக்கமுடியும். நல்ல வேளை இப்பவாவது சொன்னியே. இனி என்ன நடந்தா லும் என்கிட்ட சொல்லு.''

மதுமிதா திடீரென்று ஒரு பிற்பகல் இரண்டு கட்டிடங் களுக்கு நடுவில் உள்ள குழாயில் நடந்தபடி கத்த ஆரம் பித்தாள்.

''நான் பத்மநாபனை நேசித்தேன். அவன் என்னைப் பதினேழுமுறை அனுபவித்தான். இப்போது என்னை விட்டு விலகி ஓடுகிறான். அவன் திருமணத்திற்கு சம்மதிக் கும் வரை நான் இறங்க மாட்டேன்'' உச்சியில் நின்று உரக்க கத்தினாள்.

பத்மநாபன் அம்மாவுக்கு போன் செய்தான்.

அம்மா கலேஜுக்கு ஆட்டோவில் வந்தாள். படியேறி மாடியை அடைந்தாள். குழாய் அதிரும்படி ஒரு கட்டை யால் அடிக்க ஆரம்பித்தாள். அவள் நகர்ந்து மறுபக்கம் போனதும், அடுத்த பில்டிங்குக்கு போனாள். முறைத்து நின்றவளை பளீரென்று ஓங்கி அறைந்தாள். சட்டையைக் கிழித்தாள்.

மதுமிதா மிகவும் உரக்கக் கத்தினாள். வாய்க்கு வாய் விபச்சாரி என்று கத்தினாள். டெல்லியில் எடுத்த போட்டோக்களை மதுமிதா கால் தூக்கி ஆடிய நடன போஸ்களை பத்மநாபன் அம்மா நிர்வாகத்தின் முன் இறைத்தாள். இது அத்தனையும் பத்திரிகையில் வரும் என்றாள். மதுமிதாவின் தாய்க்கு தந்தியும், தந்தைக்கு டெலக்ஸூம் கொடுத்தான்.

ஒரு தாயின் சத்திய ஆவேசத்தாலேயோ அல்லது மதுமிதாவின் ஆட்டம் அதிகம் என்ற காரணத்தினாலேயோ கல்லூரி ஆண்கள் மதுமிதாவை கடுமையாகக் கண்டிக்கத் துவங்கினார்கள்.

ஆண்களின் ஒற்றுமை பெண்களுக்கு இல்லை, மதுமிதாவை ஆதரிக்கிறகுழு எதிர்க்கிற குழு என்று பெண்கள் இரண்டாகப் பிரிந்தார்கள். ஆதரிக்கின்ற' குழுவிலிருந்து நழுவினார்கள்.

மதுமிதாவைக் கல்லூரி பத்து நாட்கள் சஸ்பெண்ட் செய்தது. ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது. மதுமிதா கட்ட மறுத்து காணாமல் போனாள்.

உங்களால் இன்ஜினியராகத்தான் முடியும். உங்களைப் போல பத்து இன்ஜினியர்களை வேலைக்கு வைக்க என்னால் முடியும், எனக்கு எந்த வருத்தமுமில்லை என்று சொல்லிவிட்டுப் போனாளாம்.

பத்மநாபன் நான்கு நாள் ஜூரத்தில் படுத்தான். அம்மா அவனுக்கு ஒழுக்கம் பற்றி விதவிதமாகச் சொல்லிக் கொடுத்தாள்.

''அடக்கம் பெண்களுக்கு மட்டுமில்லை. ஆண்களுக்கும் உண்டான விஷயம். பெண் ஆணிடம் அடங்கியிருக்க வேண்டும். ஆண் பெண்ணிடம் அடங்கியிருக்க வேண்டும். குழந்தைகள் பெற்றோரிடம் அடங்கியிருக்க வேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளிடம் அடங்கியிருக்க வேண்டும்.



''நீ என் குழந்தை உன்னிடம் நான் அடங்கியிருப்பது என்பது என்ன தெரியுமா. புருஷன் செத்துப் போனதும் நான் இன்னொரு புருஷன் தேடாமல் நான் உன் நலனுக்காக வாழ்கிறேனே அதுதான் உனக்கு அடங்கியிருத்தல். நீதான் என் முதல் விஷயம். நீதான் எனக்கு எதிர்காலம். நீதான் எனக்கு எல்லாமும்.

''எத்தனை விதமான ஆசைகள் என்னை அவஸ்தைப் படுத்தினாலும் உன்னைப் பாதிக்காத ஆசையைத்தான் நான் விரும்புகிறேன். உன்னைப் பாதிக்காத ஆசையைத் தான் நான் நிறைவேற்றிக் கொள்கிறேன். நீயும் அப்படித்தான் இருக்க வேண்டும். என்னைப் பாதிக்காத ஆசையைத்தான் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். என்னை அவமானப்படுத்தாதவர்களைத்தான் நீ நண்பர்களாக கொள்ள வேண்டும். என்னை இகழ்ந்து பேசாதவளைத்தான் நீ மனைவியாக்கிக் கொள்ளவேண்டும்.''

''வேறு வழியில்லை பத்மநாபா. இது சுயநலமில்லை. இது குறுகிய மனப்பான்மையில்லை. இதுதான் வாழ்க்கை. இதற்குப் பெயர் அனுசரித்தல்.''

அனுசரித்தல் பெண் மட்டும் செய்து கொண்டோ அல்லது நீ மட்டும் செய்து கொண்டோ குடித்தனம் நடத்த முடியாது. அனுசரித்தல் மாறி மாறி இயங்க வேண்டிய விஷயம். இடதுகால் உந்த வலது கால் நடப்பதுபோல் வலதுகால் இடதுகால் அசைவது போல் மாறி மாறி செய்ய வேண்டிய விஷயம். வீடு மொத்தமும் இப்படித்தான் இயங்க வேண்டும்.

காலின் கீழ் கிடப்பது காதல் அல்ல, பத்மநாபா. மற்றவர்கள் அப்படியிருக்க வேண்டும் என்று ஆசைப் படுபவர்கள் மன நோயாளிகள். மன நோயாளிகளுடன் வாழ்க்கை நடத்துவது சிரமமானது.

மனநோயாளியின் இன்னொரு முக்கியமான குணம் என்ன தெரியுமா.

தன்னை எல்லோரும் கவனிக்க வேண்டும் என்று ஆவேசப்படுவது. நன்றாகக் கவனி, பத்மநாபா, விரும்புவது அல்ல. ஆவேசப்படுவது.

ஆவேசப்படுகிற எவருக்கும் தன் தேவையும் தெரியாது. பிறரையும் புரிந்து கொள்ள முடியாது. யாரால் ஆவேசமற்று இருக்க முடியும் என்று உனக்குத் தெரியுமா? தன்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பவர்களால்தான் ஆவேசப்படாமல் இருக்க முடியும். தன்னை உற்றுப் பார்க்க யாரால் முடியும்.

அம்மா அவனை உற்றுப் பார்த்தாள்.

யாருக்கு பிறர் மீது அக்கறை இருக்கிறதோ, நம் நடவடிக்கை யாரையேனும் தொந்தரவு செய்கிறதா என்று யாருக்கு அக்கறை இருக்கிறதோ அவன் தன்னை உற்றுப் பார்க்க ஆரம்பித்து விடுவான்.

வாழ்க்கையின் எல்லா விஷயமும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டவை.

சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், பூமியும் பூமியில் எல்லா உயிர்களும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டவை. ஒன்று அசைய பிரபஞ்சம் முழுதும் அசைகிறது.

அதனால் ஒவ்வொரு அசைவையும் கவனத்துடன் செய்ய வேண்டியிருக்கிறது.

இனி எது செய்தாலும் யோசித்த பிறகே செய். ஆழ்ந்து யோசிப்பதற்கு எப்பொழுதும் அமைதியோடு இரு.



அந்த அமைதி வேண்டுமெனில் பரபரப்பு இல்லாமல் இருக்கக் கற்றுக்கொள். ஒரு மனிதன் எதற்கு பரபரக்க வேண்டும். இங்கு எதுவும் முக்கியமில்லை. எதுவும் நிரந்தரமில்லை. இதை புரிந்துகொண்டால் பரபரப்போ படபடப்போ வராது,

அமைதிதான் ஆரம்பம். அமைதிதான் முடிவு. நடுவில் மட்டும் ஆரவாரிப்பானேன்.

ஆரவாரித்தவர்கள் யாருமே சந்தோஷமாக இருந்த தில்லை சந்தோஷம் இல்லாது போய்விடுமோ என்கிற பயம்தான் ஆரவாரத்திற்கு காரணம்.

நான் சொல்வதை திரும்ப திரும்ப யோசி.

''அந்தப் பெண்ணின் நிர்வாணத்தில் மனசை லயிக்க விடாதே. திருடித் தின்றதைப் பற்றி சப்புக் கொட்டி பேசாதே. காமம் கம்பீரமாகக் தீர்க்கப்பட வேண்டிய விஷயம். பசி தீர்க்க சாக்கடையில் இறங்குவாயா... மலம் முகர்ந்து பார்ப்பாயா... வீசி எறிந்தால் பொறுக்கித் தின்பாயா. அதற்கு ஒரு மரியாதை தேவைப்படுகிற தல்லவா. அப்பொழுது தானே அது சரியாக ஜீரணம் ஆகிறது. அப்பொழுது தானே நிறைவு வருகிறது உணவின் மீது பிரியம் வருகிறது.''

''உண்ணுகிற உணவுக்கு மரியாதை தேவைப்படுகிற போது, அந்தப் பசி தீர்க்கப் பண்பாடு அவசியமாகிறபோது உடற்பசி தீர்க்க அதேவிதமான விஷயங்கள் வேண்டாமா.''

''காமம் இன்னொரு உடல் சம்பந்தப்பட்டதில்லையா... அந்த உடலுக்குள் ஒரு மனம் இருப்பது உனக்குப் புரியவில்லையா''

''மிகப் பெரிய தவறிலிருந்து நம் குல தெய்வம் உன்னைக் காப்பாற்றியிருக்கிறது. நம் முன்னோர்கள்

உன்னை மீட்டிருக்கிறார்கள். நீ முன்னை விட இன்னும் வலுவோடு வளர வேண்டும் என்பதற்காகவே இந்த சோதனைகள் நிகழ்ந்திருக்கின்றன.''

உன்னை உனக்கு நிருபித்துக் காட்டு.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.

பத்மநாபன் பாறைக்கல் அல்ல. சந்தனக் கட்டை, கரைந்தான். மணம் வீசினான்.

ஃ ஃ ஃ

# 3

வாழ்க்கையில் அபத்தமாய் ஏதேனும் செய்து, அந்த அபத்தத்தின் விளைவாய் கடுமையாய் தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டு, அவமானப்பட்டு நாலு பேருக்கு நடுவே கேலிப் பொருளாக நின்று, அப்படி நின்ற நேரம் மிகச் சிறந்த நபரால் வழிக்காட்டப் பட்டாரென்றால் அவன் மறுபடி பிறந்தவன் என்பதே அர்த்தம். இன்னொரு ஜென்மம் எடுத்தவன் என்பதே அர்த்தம்.

அவனுடைய வளர்ச்சி மிக வேகமாக இருக்கும். அவன் தெளிவு மிக உறுதியாக இருக்கும்.

தன்மீது படிந்த அந்தக் கேவலக் கறையை நீக்க அவன் எல்லாவிதமாகவும் முயல்வான்.

பத்மநாபன் படிக்கத் துவங்கினான். மனதை மதுமிதாவிடமிருந்து திருப்ப மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் பாடத்தில் மனதை முழுமையாக திருப்பினான். பாடம் தாண்டியும் படிக்கத் துவங்கினான். ஆனால் நண்பர்கள் கேலி செய்தார்கள். அவள் பறந்து போனாளே என்று பாட்டு பாடினார்கள்.



மதுமிதாவை காதலிக்க முடியாதவர்கள் எல்லாம் பத்மநாபனின் காதல் தோல்வியைப் பெரிதாக எடுத்துக் கொண்டார்கள்.

''ஒரு பெண்ணுக்கு வாழ்க்கையை கெடுத்துட்டியேடா சண்டாளா'' என்று வேகமாகப் பேசிவிட்டு பிறகு கண்ணடித்தார்கள்.

''அவ அட்ரஸ் கொடு. நான் அவளைக் கட்டிக்கிறேன் உன் ஐயர் புத்தியைக் காமிச்சுட்டேல்ல...'' என்று வம்புக்கு இழுத்தார்கள்.

அதிகம் பேசாத ஒரு பெண் ஆனந்தவிகடனில் இந்தக் காதலை வைத்துக் கதை எழுதினாள். மாணவர் கலை விழாவில் பட்டிமன்றம் நடந்தபோது மறைமுகமாய் இவன் காதலைச் சொல்லி தாக்கிப் பேசினார்கள்.

நான்காவது வருடம் முடிந்து ஐந்தாவது வருடம் ஆரம்பிக்கிறபோது பத்மநாபன் எல்லா விழாக்களையும் தவிர்த்தான். யாரோடும் பேசாது தனித்து நின்றான்.

ஷேவ் செய்யக்கூட நேரம் ஒதுக்காமல் படித்ததால் தாடி வளர்த்துக் கொண்டான். கரு கருவென்ற தாடியும், படிப்புகளையும், சற்று கவலை தோய்ந்த முகமும் அவனுக்கு அழகை கொடுத்தன.

கதை எழுதிய பெண் அவனுக்கு கடிதம் எழுதினாள். உன் மனதில் எனக்கு இடம் உண்டா என்று வினவியிருந்தாள்.

பத்மநாபன் கடிதத்தை கிழித்துப் போட்டான்.

படிப்பு முடிகிறபோதே பாம்பே கம்பெனி இரண்டு காலேஜுக்குள் நுழைந்து இண்டர்வியூ நடத்தியது.

அந்த இண்டர்வியூ வேறு மாதிரியாக இருந்தது. ஆபீஸுக்கு மாணவனை வரவழைக்காது எங்கே மாணவன் இருக்கிறானோ அங்கே ஆபீஸர்கள் வந்தார்கள். அவன் நோட்டு புத்தகத்தை டைரியைப் புரட்டிப் பார்த்தார்கள். வீட்டிற்கு வந்து அந்த சூழ்நிலையை கவனித்துக் கொண் டார்கள். மத்தியானம் சாப்பாட்டுக்கு ஹோட்டலுக்கு கூட்டிப் போய் ஐந்து நட்சத்திர ஹோட்டல் நாகரீகம் தெரிகிறதா என்று பார்த்தார்கள்.

வெளிநாட்டில் வாழ முடியுமா என்று சோதித்துப் பார்த்தார்கள்.

ஆங்கிலப் புலமையை அளந்து வைத்துக் கொண்டார் கள். இன்னும் மொழி கற்றுக்கொள்ளும் ஆர்வம் உண்டா என்றும் சோதித்துப் பார்த்தார்கள்.

கலாச்சார மாறுதலை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் இருக்கிறதா...இல்லை குறுகிய வட்டமா என்று கேள்வி கேட்டு தெரிந்து கொண்டார்கள்.

இந்தியா முழுவதும் உள்ள இன்ஜினியரிங் கல்லூரி களில் படையெடுத்து நூற்றிநாற்பது மாணவர்களை சோதித்து இரண்டு பேர்களை தேர்ந்தெடுத்தார்கள்.

அதில் முதலாமவன் சங்கரசுப்பிரமணியன். இரண்டா மவன் பத்மநாபன்

''ஏய் பத்மநாபா...நீ மதராஸியோ...எனக்கு கொறைச்சு தமிழ் அறிவு எங்கம்மா நன்னா தமிழ் பேசு வள் நா தமிழ் உனக்கு புரியறதோ''...பம்பாய் பக்கத்து பாலக்காட்டு சங்கர சுப்பிரமணியன் கை குலுக்கினான்.

தமிழும் தெரியாமல், மலையாளமும் அறியாத பாலக்காட்டுக்காரர்கள் பம்பாய் போனார்கள். இந்தியை மானபங்கப்படுத்தினார்கள்.



ஆனால் அவர்கள் குறிக்கோள் இலக்கியம் வளர்ப்பது அல்ல. காசு சம்பாதிப்பது, எந்த தேசத்துக்கு குடி பெயர்ந்து போகிறார்களோ அங்கே ஜனங்களோடு ஒட்டிக் கொள்வது.

குருவாயூரப்பன்தான் சகலமும் என்பவர்கள் வினாய கருக்கு மாறினார்கள். ஷீரடி சாய்பாபாவை தலையில் வைத்துக் கொண்டாடினார்கள். செய்யும் தொழிலில் மிகுந்த ஈடுபாடோடு இருந்தார்கள். திருட்டையும், பொய்யையும் அறவே வெறுத்தார்கள். முன்னேறுவதில் வெறியோடு இருந்தார்கள். புத்திமானே பலவான் என்று நம்பினார்கள்.

சங்கர சுப்பிரமணியனும், பத்மநாபனும் ஜப்பான் பயணமானார்கள். ஐந்து வருட காண்ட்ராக்ட் கையழுத் திட்டு எடுத்தவுடனே பதினாலாயிரம் ரூபாய் உதவித் தொகை பெற்றார்கள். ஒரு வருடத்திற்கு பிறகு பம்பாய் வந்தார்கள்.

இந்தியாவில் நடுத்தர குடும்பங்களுக்கு என்னென்ன தேவை என்று ஆராய்ந்து டி.வி, மிக்ஸி, கிரைண்டர் என்று பலதும் பட்டியலிட்டுக் கொடுத்தார்கள். தமிழ் நாடுதான் அமைதியான இடம் என்று தீர்மானிக்கப்பட்டு அங்கே தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டது.

தொழிற்சாலையில் பூமி பூஜையிலிருந்து முதல் வாஷிங் மெஷின் வெளியே வரும் வரை அயராது உழைத் தார்கள்.

சங்கர சுப்பிரமணியன் சென்னைக்கு குடி வந்தான். முதல் மூன்று மாதம் பத்மநாபன் வீட்டில் தங்கினான். பிறகு எதிர்பக்க ஃப்ளாட்டுக்கு மாறி சாப்பாடு இங்கே என்று வைத்துக் கொண்டான். ஒன்றரை வருடங்கள் பத்மநாபன் வீட்டிலேயே மூன்று வேளையும் சாப்பிட் டான்.

சங்கர சுப்பிரமணியன் குடியேறிய ப்ளாட்டுக்கு சொந்தக்காரர் சென்னை நகருக்கு வெளியே கிராமம் போலும் ஒரு இடத்தில் நிலம் வாங்கிக் கொண்டு தன் குடும்பத்துடன் தங்கியிருந்தார்.

மாதம் தவறாமல் இரண்டாயிரம் ரூபாய் வாடகை அவன் வந்து தரவேண்டும் என்று எதிர்பார்த்தார். சென்னையில் பிரம்மச்சாரிக்கு வீடு கிடைப்பது கடினம். நாற்காலி மேஜை கட்டிலோடு மிக வசதியான இந்த இடம் கிடைத்தது ஒரு அதிர்ஷ்டம். வீடு கிடைத்த சந்தோஷத்தில் எல்லா நிபந்தனைகளுக்கும் சங்கர சுப்பிரமணியன் ஒத்துக் கொண்டுவிட்டான்.

காசுக்கு எந்த பிரச்சினையும் இல்லையென்றாலும் வாடகை கொண்டுபோய் கொடுப்பது ஒரு பெரிய விஷயமாக ஆகிவிட்டது. ஒன்றாம் தேதி பத்து மணிக்கு வாடகை வரவில்லையெனில் ஓனர் பார்ட்டி டென்ஷன் ஆகியது. வெளியூருக்கு கம்பெனி விஷயமாகப் போகும் போது சங்கர சுப்பிரமணியன் ஆபீஸ் பியூனிடம் கொடுத்து அனுப்புவான்.

ஒருமுறை முதல் நாளே ஆபீஸ் பியூனிடம் காசு கொடுத்து விட்டு சங்கர சுப்பிரமணியன் வெளியூர் போய் விட்டான். மறுநாள் ஆபீஸ் பியூன் ஒன்பது மணிக்கு வேட்டியும் சட்டையுமாய் ஆபீஸுக்கு வந்து மாமனார் இறந்து விட்டார். உடனே போக வேண்டும் என்று சொல்லி பத்மநாபனிடம் வாடகை காசு கொடுத்தார்.

ஒரு உலர் சலவயக்கத்தில் ஆறு மெஷின்கள் வாங்கியிருந்தார்கள் சின்ன சின்ன பிரச்சினைகள் சொன்னார்கள் அதை மேற்பார்வையிட்டு சென்னை நங்கநல்லூரில் இறங்கி வீதி, வீதியாக அலைந்து தேடி மேடு பள்ளத்தில் கம்பெனி காரை ஏற்றி இறக்க விரும்பாமல் சங்கரசுப்பிரமணியனின் வீட்டு ஓனரைத் தேடி வீட்டுக்குள் நுழைய,



தன் கம்பெனி பெயர் சொல்ல வாஷிங் மெக்கானிக் என்று நினைத்துக் கொண்டு வீடு முழுக்க உச்சஸ்தாயியில் சத்தம் போட்டது.

அனிதாதான் அவர்களை அடக்கினாள் வாஷிங் மெஷின் கண்டு ஒரு பயம். இதுவரை உபயோகப் படுத்தாததால் ஒரு அச்சம். சட்டையில் உள்ள குண்டூசி சுருக்கென்று குத்த ஷாக்கடித்ததான ஒரு கற்பனையில் வேலைக்காரி அலற வீடே வாஷிங் மெஷினை திட்டுகிறது. அவர்கள் சமாதானத்திற்காகத்தான் காலையில் மெக்கானிக் வரவேண்டும் என்று போன் செய்தோம். உடனே வந்ததற்கு நன்றி என்றாள்.

இன்னொரு வெள்ளைச் சட்டையைப் போட்டு, வேட்டியைப் போட்டு சுழற்றி நீர் தொட்டு காண்பித்து, மெஷினை நிறுத்தி பக்கச் சுவர்களை தடவிக் காண்பித்து சட்டையைக் கொத்தாய் எடுக்க சுரீன்று கையை ஏதோ குத்தியது. பத்மநாபன் 'ஆ' என்று அலறினான். சுற்றி நின்று வேடிக்கை பார்த்த வீடு தபதபவென்று பின்னடைந்தது. திட்ட ஆரம்பித்தது.

பெரிய ஒரு கதர் சட்டையில் இரண்டு குண்டூசிகள் குத்தப்பட்டிருந்தன. வெற்றிலைப் பாக்கு போடும் பெரியவர் பல்லு குத்த அந்த குண்டூசிகளை சொருகி வைத்து வாஷிங் மெஷினில் அப்படியே போட்டு கெட்ட பெயர் உண்டாக்கினார். அந்த பயம் நீக்க பல்வேறு விதமாய் பேச வேண்டியிருந்தது. அனிதா அங்கு அவனுக்கு துணையாக இருக்க ஆதரவாய் பேச பத்மநாபன் தன்னை ஒரு அதிகாரி என்று சொல்லிக் கொள்ளாமலேயே திரும்பினான். இரண்டு மூன்று முறை அந்த வீட்டுக்குப்போய் அந்த அமைப்பைப் புரிந்து கொண்டு அம்மாவிடம் விஷயம் சொல்லி அனிதாவை பெண் பார்த்து வரச் சொன்னான்.

அம்மா தனியே போய் பெண் பார்த்துவிட்டு வந்ததும் அனிதா வீடு பத்மநாபன் வீட்டுக்கு வந்து அட்டகாசமாய் பிள்ளை பார்த்ததும் மறக்கமுடியாத சம்பவங்கள்.

அனிதா மனைவியான பிறகு வாழ்க்கையில் சந்தோஷம் கொடி கட்டிப் பறந்தது. திருமணமான மாலையே ஒரு நிம்மதியும். சந்தோஷமும் பத்மநாபனுக்குள் குடி புகுந்தன. தன்னைவிட தன் அம்மாவை தன் மனைவி நேசிப்பது பத்மநாபனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

வெகுநாளுக்குப் பிறகு அம்மா வாய்விட்டுச் சிரிப்பதும், ஊர் சுற்ற ஆசைப்படுவதும் தெரிந்தது.

''ஹனிமூனுக்கு அம்மாவைக் கூட்டிக் கொண்டு போனால் என்ன, அம்மா ஊட்டி பார்த்ததில்லையாமே. நம்மோட வரட்டுமே.''

திருமணம் கழித்து பதினைந்து நாட்களுக்குப் பின்னர் ஹனிமூன் போனபோது அம்மாவையும் அழைத்துக் கொண்டு போனார்கள். மலை வாசஸ்தலம், கோயில் குளம் என்று அலைந்தார்கள்.

வீடு பற்றிய எல்லா பிரச்சினைகளையும் மறந்து பத்மநாபன் வேலையில் ஈடுபட்டான், கம்பெனியில் இன்னும் முக்கியமானவனானான். கம்பெனி அவனை ஹைதராபாத்துக்கு மூன்று மாதம் போய் வா என்று அனுப்பியது.

ஹைதராபாத் ஒரு காஸ்மா பாலிட்டன் சிட்டி, இந்தியாவிலேயே பல்வேறு தரப்பட்ட மக்கள் வாழும் இடம். வட இந்தியர்கள் தென் இந்தியர்கள், முஸ்லீம்கள், இந்துக்கள், மிகுந்த பணக்காரர்கள், மிகுந்த ஏழைகள் நடுத்தர வர்க்கத்தினர் என்று பலர் இருக்கும் இடம்.



பவுடர் சோப்பு, பற்பசை, உதட்டுச்சாயம், ஆரோக்கிய பானம் முதன் முதலாய் ஹைதராபாத்தில்தான் வெள்ளோட்டம் விடப்படும். ஹைதராபாத் அதை அங்கீகரித்தால் வெற்றி பெறும். இல்லையெனில் தோல்வியுறும்.

ஒரு அடிக்கு ஒரு அடி அகலத்தில் உள்ளடக்கமாய் கம்பெனி புகை போக்கும் மின்விசிறி தயாரிப்பில் அவன் இறங்கியது. ஒரு சாக்லேட் டப்பா அளவுக்கே பலவித வண்ணங்களில் அந்த மின் விசிறி இருந்தது. நடுத்தர வர்க்கம் நிச்சயம் வாங்கும் என்ற நம்பிக்கையைக் கொடுத்தது. இரண்டாயிரத்து முன்னூறு ரூபாய் விலையில் ஹைதராபாத்தில் அதை இறக்க திட்டமிடப்பட்டது.

பத்திரிக்கை விளம்பரங்களும், ஒரு நிமிட தொலைக்காட்சிப்படமும், போஸ்டர்களும் ஒரே நேரத்தில் வெளியிடப் பட்டன. பத்மநாபன் தலைமை தாங்கினான். ஆண்களும், பெண்களும் கொண்ட நாற்பது பேர் குழுவை வீட்டுக்கு வீடு அனுப்பினான். மக்களின் நாடி பிடித்துப் பார்க்க அவனும் களத்தில் இறங்கினான்.

ஒரு வீட்டுக் கதவை வேலைக்காரி திறக்க உள்ளே நுழைந்து எஜமானியைக்கேட்டான், எஜமானிக்கு உடம்பு சரியில்லை என்று வேலைக்காரி சொன்னாள், சரி என்று திரும்பியபோது தடாலென்று சத்தம் கேட்டது.

''அம்மா கீழ வுழுந்துட்டாங்க யாராவது ஓடி வாங்களேன்'' என்று வேலைக்காரி கத்த அனிச்சையாய் பத்மநாபன் வீட்டுக்குள் ஓடினான். பாத்ரூமிற்கும், ஹாலுக்கும் நடுவே மதுமிதா அலங்கோலமாய் விழுந்து கிடந்தாள். பத்மநாபன் அவளை தொட்டுத் தூக்கி கட்டிலில் கிடத்தினான்.

மதுவின் நெடி மூக்கைத் துளைத்தது.

இப்போது என்ன செய்வது. அப்படியே படுக்கவைத்து விட்டுப் போய்விடுவதா அல்லது ஏதேனும் உதவி செய்வதா.

என்னவென்று உதவி செய்வது. ஒரு குடும்பத் தலைவி, குடித்துவிட்டு கிடக்கிறாள் என்பதாலா அல்லது கூடப்பழகிய சினேகிதி ஏதோ குழப்பத்தில் இருக்கிறாள் என்று உதவி செய்வதா.

உதவி செய்துவிட்டு போய் விடுவதா அல்லது மீண்டும் உறவை வளர்த்துக்கொள்வதா. நாடித் துடிப்பு சற்று வேகமாக இருந்தது. இன்னும் பருத்து அகன்று இருப்பது தெரிந்தது. வீட்டில் மிதமான செல்வசெழிப்பு இருந்தது. கழுத்தில் கனமான செயினும் கருகமணி தாலியும் இருந்தன. புடவை தடுக்கி விழுந்திருக்க வேண்டும். கட்டை மெட்டியில் புடவைக்கரை மாட்டிகிழிந்து சிக்கியிருந்தது.

வேலைக்காரப் பெண் வெறும் திமிசுக் கட்டையாய் இருந்தாளே ஒழிய விஷயத்தின் முக்கியத்துவம் அவள் மண்டைக்குள் எட்டவேயில்லை. ஒரு ஈரத் துணியால் முகத்தை துடைத்து மதுமிதாவை உலுக்கி எழுப்பினான்.

அப்படி செய்தபோது அவளோடு சந்தோஷமாக இருந்த காலங்கள் ஞாபகத்திற்கு வந்தன. அந்த உடம்பின் ஒவ்வொரு பகுதியும் தான் ஆண்டு அனுபவித்தது.

மதுமிதாவால் எழுந்திருக்க முடியவில்லை. வாழ்க்கையில் எதுவுமே முக்கியமில்லை என்பவர்களால்தான் இப்படி குடிக்க முடியும். எதன் மீதும் அக்கறையில்லாதவர்கள்தான் இப்படி குடிக்க முடியும்.

சமையலறைக்குள் போய் எலுமிச்சம் பழம் தேடி அழுத்தி பிழிந்து பானம் தயாரித்து அதை வேலைக்காரியை விட்டு கொடுக்கச் சொன்னான்.



''இதை ஏண்டீ கொடுக்கற சனியனே'' பளீரென்று அவள் வேலைக்காரியை அறைந்தாள். டம்ளரை பிடுங்கி கீழே போட முயற்சி செய்தாள்.

அந்த டம்ளரை பத்மநாபன் வாங்கிக் கொண்டான்.

''மதுமிதா இதை குடி.'' அடிக்குரலில் நிதானமாய் கட்டளையிட்டான்.

மதுமிதா நிமிர்ந்து பார்த்தாள். அதிர்ந்தாள்.

''உனக்கு கல்யாணம் ஆயிடுத்துன்னு சொன்னாங்களே, பத்மநாபன், என்னைப்பார்க்க உன் பொண்டாட்டியோடயே வந்திருக்கியா...எங்க அவ.''

''ஹலோ ஐயாம் மதுமிதா.'' இறங்கி துணி நழுவ ஹாலுக்கு வந்தாள்.

மறுபடியும் அந்த உடம்பு அவன் கண்ணுக்குப்பட்டது.

''அப்ப பொண்ணடாட்டியைக் கூட்டிட்டு வரலியா. என்னைப் பார்க்க தனியா வந்தியா, நான் தனியா இருப்பேன்னு தெரிஞ்சுக்கிட்டு நீ தனியா வந்தியா அல்லது தனியா இருக்கிறது தாங்க முடியாம நான் தனியா இருக்கிறபோது வந்தியா.''

''ஒன்னு கண்டுபுடிச்சிட்டேன், பத்மநாபன். நாம எத்தனை பேரை லவ் பண்ணாலும் எவ்வளவு தடவை லவ் பண்ணாலும, நாம தனிதான். ஒண்ணாக முடியாது ஒரு குரூப்பாக முடியாது.''

''அப்புறம் ஏன் லவ் பண்ணனும், லவ் பண்றது வேஸ்ட்தானே.''

''லவ் பண்றதும் தண்ணிபோடறதும் ஒன்னு குடிக்கறதுக்கு முன்னாடி குடிக்கணும்...குடிக்கணும்...குடிக்கணும்னு தோணும் குடிக்கிற போதும் சந்தோஷமாயிருக்

கும். மறுநாள் காத்தால படற கொடுமையிருக்கே கட வுளே... இனி குடிக்கவே கூடாதுன்னு தோணும்.''

''நேத்து நைட்டும் நல்லா குடிச்சுட்டு அந்த தலை வலி தாங்காமல் காத்தாலயும் குடிச்சேன். இந்தச் சண் டாளி எலுமிச்சம் பழத்தை கொடுத்துட்டா. இப்ப படுக் கவும் முடியலை, உட்காரவும் முடியலை.''

''அவளைத்திட்டாத, மதுமிதா நான்தான் கொடுத் தேன். போய் ஷவர் திறந்து குளிச்சிட்டு ஏதாவது சாப் பிடு. சாப்பிட்டுட்டு தூங்கு. சரியாயிடும்.''

''சரியாயிட்டா முடிஞ்சு போச்சா. மறுபடியும் நைட்டுக்கு குடிக்க வேண்டாமா...''

''இன்னைக்கு ராத்திரி குடிக்காத. தலைவலி அதிகமா யிடும்.''

''குடிக்கலைன்னா வுடுவாங்களா.''

அவள் அவன் கைகளைப் பற்றிக்கொண்டு கன்னத் தில் வைத்தபடி சுருண்டு படுத்தாள். தூங்கிப் போனாள்.

அவன் தன் பெட்டியோடும், மனசு கனத்தோடும் வெளியேறினான். தலைவலி என்று சொல்லி ஹோட்ட லுக்குப் போய் ஏரியைப் பார்த்து உட்கார்ந்து கொண் டான்.

கண்களை மூடினாலும், திறந்தாலும் அவள் உடம்பே ஞாபகம் வந்தது. தொப்புளுக்கு கீழ் இருந்த புடவையும் இடுப்பும், கறுப்பு ஜாக்கெட்டும் பிதுங்கிய மார்பகமும் பிரித்து விடப்பட்ட குழலும் திரும்ப திரும்ப படமாக நின்றன.

அவள் பல்வேறு கோணங்களில் அசைந்துகொண்டே யிருந்தாள். அவள் அசையும் எண்ணத்தை மனம் தூண்டி விட்டுக் கொண்டேயிருந்தது.



அவள் கால்தூக்கி ஆடிய நடனத்தை ஞாபகப்படுத்தி மறுபடி இப்போது ஆடினால் எப்படியிருக்கும் என்று கற் பனை செய்தது. ஒரே ஒரு முறை இதை எதிர்த்துத் தடுக்கும் எண்ணம் வந்தது.

அவளைப் பார்த்ததின் விளைவோ என்னவோ அலுவலகத்தில் மற்ற பெண்களைப் பார்க்கிற போதும் உடம்பையே பார்க்கத் தோன்றியது.

அடிபட்டதும், அவமானப்பட்டதும் நாலு பேர் சிரிக்க பழி வாங்கப்பட்டதும் மறந்து போயிற்று.

அப்படி ஒரு அவமானம் இனி நேராது. அது என் அறியாமையால் நேர்ந்த அவமானம். அது மறுபடி எனக்கு நேராது. மதுமிதாவோடு மறுபடியும் சிநேகிதம் கொண் டால் என்ன தவறு. மதுமிதா சுலபமாய் தொடுகிறாள். தொட அனுமதிக்கிறாள்.

இங்கே ஹைதராபாத்தில் ஒரு பெண்ணைத் தொட் டால் யாருக்கு தெரியப் போகிறது.

மதுமிதாவை பயந்து பயந்து அனுபவித்திருக்கிறோம். பசியில் மடி முட்டும் பசுங்கன்றுபோல் தடுமாறித்தான் கூடியிருக்கிறோம்.

இப்போது கூடல் சாதாரணமானதுபோல் அப்போது இல்லை. இப்போது இருக்கும் கெட்டிக்காரத்தனமும் அப்போது இல்லை, இவையெல்லாம் இருக்கும்போது மதுமிதாவை அனுபவித்தால் என்ன.

மதுமிதா அப்போது செங்காயாய் இருந்தாள். இப் போது கனிந்த பழமாய் இருக்கிறாள். கூடலுக்கு வெட்கப் படாத பெண்ணோடு கூடுவதுதான் சுகம்.

மனசு குரங்கு போல் குதித்து குதித்து கிளை தாவி யது.

சரி...சென்னையில் இருக்கும் உன் பொண்டாட்டிக்கு என்ன பதில். அனிதாவுக்கு தெரிந்தால் எத்தனை அசிங்கம்...அனிதா இப்படி எவனோடாவது போனால் விடுவாயா...

அனிதா மாதிரி பெண்கள் எல்லாம் போகமாட்டார்கள். அவளுக்கு போகத் தெரியாது. அவளுக்கு புருஷனை விட மாமியார்தான் முக்கியம்.

மாமியாரை ஹனிமூனுக்கு கூட்டிக்கொண்டு போன பைத்தியம் அது. அது இருபத்தைந்து வயதில் சரி என்று சொல்லி அதற்கு மாடு மாதிரி தலையாட்டிவிட்டோம்.

''ஹனிமூனுக்கு உன் அம்மாவைக் கூட்டிக் கொண்டு போனாயா...பைத்தியமா நீ''

''உன் மனைவி வற்புறுத்தினாளா. ஒருவேளை அவள் பைத்தியமோ?''

''என் பேச்சை தப்பாக எடுத்துக் கொள்ளாதே. உலகத்திலேயே மிகப்பெரிய கொடுமைக்காரி உன் தாய்தான். நீ போனது ஹனிமூன் அல்ல. தயவுசெய்து அதை யாரிடமும் சொல்லாதே. நீ போனது சுற்றுலா வேண்டுதல்.''

''நான் என் ஹனிமூனைச் சொல்லட்டுமா. காஷ்மீர் காஷ்மீர் என்று இப்போது பேப்பரில் பேசப்படுகிறதே... அந்த இடத்தில் ஒரு காலத்தில் படகு வீடுகள் இருந்தன. ஒரு படகு வீட்டை மூன்று நாள் வாடகைக்கு எடுத்துக் கொண்டு நான் இந்த உலகத்தையே மறந்து இருந்தேன். பகல் முழுவதும் அந்தி போலவேயிருக்கும். அந்த காஷ்மீரத்தை என்னால் மறக்க முடியாது. என் மனைவி அப்போது பதினெட்டு வயதுப் பெண். படகு வீடு கொடுத்த தைரியத்தில் முற்றிலும் கூச்சமற்றவளாக இருந்தாள். நாங்கள் அந்த மூன்று நாளும் ஆதாம் ஏவாள் போல் இருந்தோம்.''



''மகனுடைய ஹனிமூனுக்கு தானும் வருகிறேன் என்று சொன்ன அம்மா... எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. உலகத்தில் இப்படியெல்லாம் கெட்டவர்கள் உண்டா.'' ஒரு பஞ்சாபி மனசு நொந்து கத்தினான். இந்த தமிழர்களே வினோதமானவர்கள் என்று முடித்தான்.

அவன் சொன்னதிலிருந்து அம்மாவின் மீது லேசாய் ஒரு கடுப்பு இருந்தது. அளவுக்கு மீறி நம்மை ஆளுமை செய்து விட்டாளோ. நமது இளம் வயது அறியாமையை உபயோகப்படுத்திக் கொண்டு விட்டாளோ. நாம் கேவலப்பட்டு விட்டோமோ...

திருமணம் ஆகி இத்தனை நாளாகியும் புருஷன் என்று இழையாமல் அம்மா, அம்மா என்று மாமியாரைச் கொஞ்சுவது ஒரு தந்திரமோ, மதுமிதா என்மனைவியாக இருந்தால் இப்படி விடுவாளா.

மனசு போல் ஒரு பச்சோந்தி உலகத்தில் வேறு எதுவும் இல்லை.

விருப்பப்பட்ட நேரத்தில், விருப்பப்பட்ட விஷயத்தை அது விளைத்துக்கொள்ளத் தயங்கியதே இல்லை. வெட்கப்பட்டதும் இல்லை.

மனம் ஒரு நுழை நரி. ஆடுகளோடு ஆடுகளாய் மந்தைக்குள் நுழைந்து பட்டிக்குள் அடைபடும் வரை சுருண்டு படுத்திருந்துவிட்டு நடுநிசியில் ஆடுகள் அரை தூக்கத்தில் இருக்கிறபோது குட்டி ஆட்டின் கழுத்தை கவ்வி இரத்தம் குடித்துவிட்டு மறுபடி ஆடுகளோடு ஆடுகளாய் வெளியேறிவிடும்.

இரத்தம் குடிக்க வேண்டும் என்ற ஒரேயொரு காரணத்திற்காக மிகுந்தபொறுமையோடு காத்திருக்கும் நாடகமாடும்.

மதுமிதா இருக்கும் ஏரியாவுக்கு வேறு யாரும் போகா மல் இருக்க பத்மநாபன் பார்த்துக் கொண்டான்.

மறுநாள் மிகச்சிறந்த முறையில் உடுத்திக் கொண்டு கம்பெனி டீலர்களுக்குக் கொடுக்கும் பரிசுப் பொருளை எடுத்துக் கொண்டு காரை மெருகேற்றச் சொல்லிக் கட்டளையிட்டு பத்தரை மணிக்கு சகுனம் பார்த்து வெளியே வந்தான். ஒரு படபடப்போடு மதுமிதா வீட்டின் மணி குமிழை அழுத்தினான்.

''அம்மா இல்லீங்களே அம்மா ஆஸ்பத்திரிக்குப் போய்ட்டாங்களே'' என்று கொழுத்த வேலைக்காரப் பெண் சொன்னாள்.

''ஆஸ்பத்திரியா என்ன ஆயிற்று?''

''ஒன்றும் ஆகவில்லை. அம்மாதான் அந்த ஆஸ்பத்திரி யின் டாக்டர்.''

''என்ன?''

அவன் தன்னை மீறிய சிந்தனையுடன் ஆஸ்பத்திரிக் குப் போனான். ஹைதராபாத்தில் மிகப் பெரிய ஆஸ்பத்திரி அது.

அவன் கார்டு கொடுத்ததும், அவள் கூப்பிட்டு அனுப்பினாள்.

''வெளியே உட்கார வைக்க வேண்டாம்னுதான் உள்ளே கூப்பிட்டேன், ஒரு பத்து நிமிஷம் என் பக்கத்து லேயே வெயிட் பண்ணு'' அவள் உத்தரவிட்டாள்.

அந்த பத்து நிமிஷத்தில் எல்லாவகையிலும் அவனை விட மிகப்பெரிய உயரத்தில் அவள் இருப்பதை அவ னுக்குக் காட்டினாள்.

குடித்து அலங்கோலமாய் கிடந்த முகம் அறவே இல்லை. தலைமுடியில், விரல் நுனியில், உடுப்பில்,



உதட்டுச் சாயத்தில், பேச்சில் எல்லாவற்றிலும் ஒரு நறுவிசு இருந்தது.

''கனெக்ட் மீ டு ஹெல்த் மினிஸ்டர்'' அதிகாரமாய் பேசினாள்.

யார் பேசுவது... ஹெல்த் மினிஸ்டர் சுப்பாராவா'' குழைந்தான்.

''ஏமிரா... தொங்கா... நீ சாயந்திரம் வா... உன்னை கவனிச்சுக்கறேன்'' அதட்டினாள். அந்த அறை அதிரும் படி சிரித்தாள்.

அவளை மறுபடியும் தொட வேண்டும் என்கிற பத்ம நாபனின் கனவுகள் மெல்ல பின்னடைந்தன.

''என்ன திடீர்னு ஹைதராபாத்... மயிலாப்பூரில வீடு மவுண்ட்ரோட்ல ஆபிஸ்னு சௌகரியமா இருக்கறதை விட்டுட்டு எதுக்கு இந்த பைத்தியக்கார ஊருக்கு வந்த... கோடை காலத்துல பைத்தியம் புடிச்சிடும். அத்தனை வெயில் இருக்கும். ராத்திரி பத்து மணிக்குக்கூட வெக்கை அடிக்கும்.

கோல்ட் மெடலாமே இன்ஜீனியரிங்ல... கங்கிராட்ஸ்

நான் ஒழுங்கா இருந்தா உன்கூட ஜப்பானுக்கு வந்திருப்பேன்.''

''உனக்கென்ன குறை மதுமிதா. நீ நினைச்சா ஜப்பானையே இங்கு வரவழைக்கலாம்.''

''ஜப்பான், ஜெர்மனி எல்லாம் வரவழைக்கலாம் பத்மநாபன். ஆனா நீ கொடுத்த நிம்மதியை, சந்தோ ஷத்தை உன்னோடு இருந்தபோது இருந்த குதூகலத்தை மறுபடி என்னால் கொண்டு வர முடியாது. நான் என்னவோ குடிச்சிட்டு உலகத்திலே லவ்வே இல்லை... லவ்வு தப்பு அப்படின்னு உளறினேன்.''

''உலகத்துல லவ்வு இருக்கு. நமக்கு அனுபவிக்கத் தெரியலை. அனுபவிக்க விடலை. நம்மை ஒருத்தர் லவ் பண்றார் அப்படின்னு தெரிஞ்சபிறகு மனசுல ஏற்படற சந்தோஷம் வாழ்க்கைல ஏற்படற பிடிப்புவேற எப்பவும் வராது.''

''காதல்னா என்ன தெரியுமா பத்மநாபா... மதித்தல். மதித்தலுக்கு அடிப்படை என்ன தெரியுமா... நம்பிக்கை. நீ எனக்கு கெடுதல் பண்ணமாட்டே. அப்படீன்னு நம்பறபோது காதல் வந்துருது. கெடுதல் பண்ணுவாங்களோன்னு நினைக்கிறபோது பிரிவு வந்துருது.''

''வாழ்க்கைபத்தி நீ எனக்கு கொடுத்த நம்பிக்கையை அதனால கிடைச்ச சந்தோஷத்தை வேறெதும் கொடுக்கலை. இந்த ஆஸ்பத்திரி, மூணுகோடி ரூபா... என் பேர்ல இருக்கு. ஆனா எல்லாரும் ஏமாத்தறாங்க. என்னையும் நம்ப முடியல. யாரும் உண்மையா இல்லை. இப்பவும் எனக்கு லவ்வுன்னா உன் ஞாபகம்தான் வரும்.''

''உனக்கு என்ன வேணும் பத்மநாபன்... ஏன் ஹைத்ராபாத்.''

அவன் விஷயம் சொன்னான். இதுக்கு நான் ஹெல்ப் பண்ண முடியுமே. ஒன்னும் பெரிய விஷயம் இல்லையே. என் ஹாஸ்பிட்டல்ல நூத்திப்பன்னெண்டு ரூம் இருக்கு. எண்பத்தியாறு பாத்ரூம் இருக்கு. எண்பத்தியாறுலயும் கொண்டாந்து ஃபிக்ஸ் பண்ணிட்டேன். என்கூட செக்ரடேரியட் வா. எல்லா மினிஸ்டர் கிட்டேயும் சொல்லி ஆஸ்பத்திரி அரசாங்கக் கட்டிடத்துக்கும் வாங்கச் சொல்றேன்.''

அவள் சொன்னாள். சொன்னபடி செய்தாள். தனியே உட்கார்ந்து பேசும் போதெல்லாம் அனிதாவைப் பற்றிக் கேட்டாள். அம்மாவை விசாரித்தாள்.



''இந்த சனிக்கிழமை ஹோட்டலுக்கு வாயேன். அங்க பார்ட்டி இருக்கு. என்னுது விட பெரிய ஹாஸ்பிட்டல் ஹைதராபாத்ல இருக்கு. அதன் டாக்டர் ஓனர் வர்றார். அவரை உனக்கு அறிமுகப்படுத்தறேன்.''

''பார்ட்டியா அது...மிக பெரிய வானவேடிக்கை. ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் பாதியை விலைக்கு வாங்கி இருந்தார்கள். எல்லோரும் குடித்து விட்டுதான் வந்திருந்தார்கள். வந்த பிறகும் குடித்தார்கள். ஹோட்டல் முழுவதும் தப்பான பெண்கள் அலைந்தார்கள். உருளையாய் குள்ளமாய் ஒரு ஐம்பது வயதுக்காரனை புருஷன் என்று மதுமிதா அறிமுகம் செய்து வைத்தாள்.

இவனா உன் புருஷன் என்று அவன் திகைப்பதைப் பார்த்ததும் சட்டென்று திரும்பி கூட்டத்துக்குள் மறைந்து கொண்டாள். உடம்பெங்கும் சரிகை பளபளக்க தேவதை மாதிரி இருந்தாள்.

திடீர் என்று சீட்டு வந்தது. நூற்றுபதிமூன்றாம் நம்பருக்கு வா என்று, மதுமிதா கையெழுத்திட்டிருந்தாள். கோட்டை இழுத்து நீவிக்கொண்டு அவன் அறைக்கு போனான்.

''சங்கர நாராயணனை உனக்குத் தெரியுமா?''

''தெரியும். என்னுடைய கம்பெனிதான்.''

''அவன் என்னுடைய ஆஸ்பத்திரிக்கு வந்து விடுகிறேன் என்று கடிதம் எழுதியிருக்கிறான். உன் கம்பெனி ஆள் என்பதால் உன்னைக் கூப்பிட்டுக் கேட்டேன்.''

''ஏன்...என் கம்பெனி அவனை நன்றாகத்தானே வைத்திருக்கிறது?''

''அதுபோல மூன்று மடங்கு அல்லவா சம்பளம் தருகிறேன்.''

''சரி...ஒரு ஆஸ்பத்திரியில் மெக்கானிக் இன்ஜினிய
ருக்கு என்ன வேலை...'' பத்மநாபன் வியந்து கேட்டான்.

''இன்ஜினியரிங் சிறிய வட்டமல்ல. லேத் பட்டறை
மட்டுமே இன்ஜினியரிங் அல்ல. கம்ப்யூட்டரின் ஆட்சி
எல்லா இடத்திலும் இருக்கிறது. மருத்துவத்திற்கு ஏகப்
பட்ட இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. இருதயம்,
நுரையீரல், சிறுநீரகம், இவைகளை இயக்க நுண்ணிய
தாய் அடக்கமாய் பழுதே வராத இயந்திரங்கள் தேவைப்
படுகின்றன. இங்கே ஜப்பானிய இயந்திரங்களுக்குத்தான்
தனி மவுசு இருக்கிறது. அவ்வப்போது ஜப்பானுக்கு
போய் வேலை கற்றுக் கொண்டு இங்கே ஒரு பிளாண்ட்
ஆரம்பிக்க ஆசை இருக்கிறது. மறுபடியும் ஜப்பானுக்கு
போகிறாயா...நான் அனுப்பி வைக்கட்டுமா. வாஷிங்
மிஷினில் எந்த எதிர்காலமும் இல்லை. புகை போக்கும்
மின் விசிறிக்கு மார்க்கெட் இல்லை. அதே சமயம் ஜனங்
கள் மருத்துவச் செலவுக்கு அஞ்சுவதே இல்லை. நீ போகி
றாயா...உன் நண்பன் சங்கரநாராயணனைத் தேர்ந்
தெடுத்துக் கொள்ளட்டுமா.''

''எனக்கு நம்பிக்கையான இன்ஜினியர் தேவைப்படு
கிறது பத்மநாபா. என்னை நம்பி நூறு கோடி முடக்க
ஆள் தயாராக இருக்கிறது. நான் யாரையாவது நம்ப
வேண்டுமல்லவா வா...ஜப்பானுக்கு போய் வந்த மதராஸி
இளைஞர்கள் என்று உங்களைக் காட்டியே நூறு கோடியே
சேர்த்துவிடுவேன். சொல். என்னோடு சேர்த்து கொள்
கிறாயா...''

''எனக்கு இரண்டு நாள் டைம் கொடு.''

''ஏன்...இப்போது சொல். இங்கேயே சொல்.
அவனை இழுத்து அருகே உட்கார வைத்துக்கொண்டாள்.



''நான் யாரையாவது நம்ப வேண்டாமா...நான்
உன்னை நம்புகிறேன். உட்கார். என்ன குடிக்கிறாய்?''

''இல்லை நான் குடிப்பதில்லை.''

''தயவுசெய்து பழகு ஒரு சொஸைட்டியில் புழங்க
மது மிக அவசியம். பால் கிண்ணத்தை வைத்துக்
கொண்டு 'சியர்ஸ்' சொல்ல முடியாது. மிக லோசானது
தருகிறேன். இது உள்ளே போவதே தெரியாது.''

ஷாம்பெய்ன் பாட்டில் திறந்து சிறிது ஊற்றி அவன்
கையில் தந்தாள். முக்கால் டம்ளர் அவள் ஊற்றிக்கொண்
டாள். அவனைக் குடிக்க வைத்தாள் லேசான தித்திப்
புடன் ஷாம்பெய்ன் இறங்கியது. வயிறு புரட்டும், வயிறு
புரட்டும் என்று காத்திருந்தான். ஆனால் ஷாம்பெய்ன்
சமர்த்தாகக் குடலுக்குள் பதுங்கிக் கொண்டது.

''இன்னும் கொஞ்சம்...'' என்று அரை டம்ளர்
ஊற்றினாள்.

அந்த ஷாம்பெய்னும் தாக்காமல் அமைதியாய் இருந்
தது. அவன் முக்கால் டம்ளரைக் குடித்தான். ஷாம்
பெய்ன் அடி வயிற்றிலிருந்து புலி மாதிரி மூளையைத்
தாக்கியது.

''வாஷிங் மெஷின் இன்ஜினியரா நீ...புகை விசிறி.
மிக்ஸி, வெட்கிரைண்டர் என்று போவாயா...மருத்துவ
இன்ஜினியரிங்கில் புதுசு புதுசாய் கண்டு பிடித்துக்
கொண்டே இருக்கிறார்கள் தெரியுமா...சங்கர நாராய
ணனை வேண்டாம் என்று சொல்லி விடுகிறேன். நீ வந்து
விடுகிறாயா...''

''எடுத்தவுடன் நாற்பதாயிரம் ரூபாய் சம்பளம் தரு
கிறேன். பிறகு வொர்க்கிங் பார்ட்னராகச் சேர்த்துக்
கொள்கிறேன்.''

ஜென்மாந்திரத் தொடர்பு.
''நம்முடைய தொடர்பு ஜென்மாந்திரத் தொடர்பு. இல்லையெனில் என் வீடு
விட்ட குறை தொட்ட குறை. இல்லையெனில் என் வீடு
தேடி நான் இருப்பது தெரியாமல் நீ வருவாயா. காசு
சம்பாதி. கடல் கடந்துபோய் வாழ்க்கையை அனுபவி.
மயிலாப்பூரில் என்ன இருக்கிறது. வாரத்துக்கு ஒருமுறை
ஜப்பான் போகலாம். வாரத்துக்கு ஒருமுறை அமெரிக்கா
போகலாம். ஓய்வுக்கு எந்த தேசம் வேண்டுமானாலும்
போகலாம்.''

''இந்த நேரம் கீழே நாலாயிரம் கோடி ரூபாய்க்கு
வியாபாரம் முடிந்திருக்கும். விதவிதமான வியாபாரம்,
இது வியாபாரிகள் நடத்தும் பார்ட்டி இந்த உலகமே
வேறு. இந்த வாழ்க்கையே வேறு. இந்த மரபே வேறு
பணம் எவ்வளவு ருசி தெரியுமா...எத்தனை சம்பாதித்
தாலும் போதவில்லை. இடைவிடாது சம்பாதித்துக்
கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.''

''அன்று உன் அம்மா தடுக்காமல் இருந்தால் நாம்
இருவரும் இந்தியா முழுவதையும் ஒரு குடைக்குகொண்டு
வந்திருப்போம். ஆப்போதும் ஒன்றும் கெட்டுப்போய்விட
வில்லை.''

அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்,
மதுவின் வேகத்தில் அவன் மிருகம்போல் நடந்து கொண்
டான்.

''இந்த சந்தோஷம் உன் வீட்டில் இருக்குமா...இதற்கு
முன் இப்படி நடந்துகொள்ள எப்படி அச்சப்படுவாய்...
இப்போது முடிகிறதே. எதனால் உன்னைப் பற்றிய
நம்பிக்கை உனக்கு வந்துவிட்டது. உன் பலம் என்ன
வென்று உனக்குத் தெரிந்து விட்டது. வாழ்க்கை மாறி
விட்டது பத்மநாபா.''

''நிறைய சம்பாதிப்பது என்பது இனி இல்லை.
கன்னா பின்னா என்று சம்பாதிக்க வேண்டும். நான்



ஐந்து பவுன் பத்து பவுன் நகைகள் வாங்குவதில்லை.
நூறு பவுன். இருநூறு பவுன் என்றுதான் வாங்குகிறேன்.''

''பெரிய இடத்துப் பெண்கள் வைரநெக்லஸ். வைர
வளையல் என்று போடுவதில்லை. வைர ஒட்டியானம்
தான் போடுகிறார்கள். ஒரு கோடி என்பது சாதாரண
காசு. நூறு கோடிதான் இன்று மரியாதை. பணம்தான்
முதலில். பணத்துக்குப் பிறகுதான் மற்றது எல்லாம்.''

சொல்கிறேன்.
''தயவுசெய்து எங்கம்மாவிடம் கேட்டு சொல்கிறேன்.
என்று மட்டும் சொல்லாதே. நான் உன்னைக் கெடுத்து
விட்டதாக அவள் பைத்தியக்காரி போல் சொல்லுவாள்.
அவள் மத்தியதர வகுப்பு மிடில் கிளாஸ் புத்தி வாசலில்
கோலமும், கொல்லைப் புறத்தில் துளசி மாடமும்
வைத்திருக்கிற புத்தி.''

''நான் தொட்டியில் செடி வளர்ப்பதில்லை. நாற்பது
ஏக்கரில் காடு வளர்க்கிறேன். அதில் ஒரு ஏக்கர் மட்டும்
துளசி வளர்க்கிறேன். கொடைக்கானல் வந்து என் காடு
பார், உனக்கும் அதுபோல் ஒன்று வாங்கத் தோன்றும்.''

''மனைவி... அம்மா... குழந்தை எல்லாம் அவசியம்
தான். அவர்களைக் காசால் அடி, ஒரு டம்ளர் நிறைய
வைரங்கள் கொண்டு போய் உன் மனைவியின் மடியில்
கொட்டு. அவள் வியந்து உறையட்டும். ஜப்பானிலிருந்து
வித்தை கற்றுக் கொண்டு வந்து விட்டால்... இந்தியாவில்
உள்ள பதினாறு லட்சம் ஆஸ்பத்திரிகளிலும் நம் கருவிகள்
விற்கலாம். ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்
ஆயிரம் ரூபாய் கருவியை ஆறாயிரம் ரூபாய்க்கு
விற்கலாம்.''

''நீ சரி என்று சொல். இந்த சங்கரநாராயணனை
நான் வர வேண்டாம் என்று சொல்லி விடுகிறேன். என்ன

இருந்தாலும் உன்னை எனக்கு நன்கு தெரியுமல்லவா... நாம் காதலர்கள் அல்லவா.''

அவன் சரியென்று சொல்ல அவள் அவனைத் துரிதப் படுத்தினாள்.

விடிந்து எழ பத்து மணி ஆயிற்று அவன் ஹோட்டலுக்கு போய் தூங்கிவிட்டு மாலை முழுவதும் மண்டை கனத்துடன் உட்கார்ந்திருந்தான்.

மதுமிதா சொல்வது போல் காசு சம்பாதித்தால் என்ன என்ற யோசனை வந்தது, எதற்கு சிறியவட்டத்தில் உழல வேண்டும் என்று கேள்வி வந்தது.

திங்கட்கிழமை மதுமிதாவைப் பார்க்க அவள் ஹாஸ்பிட்டலுக்கு போனான்.

''எப்போது என்னோடு சேர்கிறாய்?''

''இன்னும் ஒரே வாரத்தில்.''

''அப்போது சங்கர நாராயணனை வர வேண்டாம் என்று சொல்லி விடுகிறேன்.'' சென்னைக்கு போன் அழுத்தினாள்

''ஹலோ... மெட்ராஸ்'' என்று ஆரம்பித்து சங்கர நாராயணனை விசாரித்தாள்.

என்ன... என்ன... என்ன... என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''என்ன சங்கர நாராயணன் கிளம்பிட்டானா...'' பத்மநாபன் ஆவலுடன் கேட்டான்.

''கிளம்பி மேல போயிட்டான். நான் வேண்டாம்னு ஒருத்தனை நினைச்சா செத்தே போயிடறாம் பாரு... இதான் என் ராசி.''

''சங்கர நாராயணன் செத்துப் போயிட்டானா.''



மனசு எங்கேயோ ஒட்டிக்கொண்டது. எண்ணங்கள் சில நொடிகள் நின்று போயின.

''நான் ஆபீஸ் போயிட்டு வந்துரட்டுமா...'' பத்மநாபன் கேட்டான்.

''மத்தியானம் சாப்பிட இங்க வாயேன்'' என்று மதுமிதா அழைக்க சரியென்று சொன்னான்.

வீட்டுக்கு போன் செய்தான். அம்மா போன் எடுத்தாள்.

''சங்கர நாராயணனுக்கு என்ன ஆச்சும்மா.''

''வாஷிங் மிஷின்ல கை வச்சானாம். மிஷின்ல ஷாக் அடிச்சுடுச்சாம்டா. ஒரு லாண்டரி கடைக்கு போவியே... அங்கதான் நடந்தது. மேடைலேர்ந்து மிஷின் சாஞ்சுதாம் பிடிக்க போனானாம். வொயர் பிடுங்கி எர்த் ஆகி நேரநெஞ்சுல தாக்கி உடனே பிராணன் போயிடுத்து. ஆஸ்பத்திரிக்கு எடுத்துட்டு போயிருக்காங்க. கார்த்தால நம்ப வீட்ல தான்டா கேட்டு கேட்டு தோசை சாப்பிட்டான். நீ வரயா...''

''வரேம்மா...''

சென்னைக்கு விமானம் ஏறினான். வீட்டிற்கு போய் சங்கர நாராயணன் தோசை சாப்பிட்ட இடத்தில் உட்கார்ந்து கொண்டான். எல்லா இன்ஜினியரிங், படிப்பும் எல்லா ஜப்பான் படிப்பும் எல்லா பதவியும் காணாமல் போய் விட்டது. கண நேரத்தில் காணாமல் போய் விட்டது. லட்சம் லட்சமாய் சம்பாதிக்க ஆந்திராவுக்கு விண்ணப்பம் போட்டும் வாஷிங்மிஷின் வழிவிட மறுத்து விட்டது.

சம்பாதிப்பது என்பது சந்தோஷத்திற்காக. சந்தோஷத்தை அழித்துக்கொண்டு ஏன் சம்பாதிக்க வேண்டும். காசு சந்தோஷமா...அல்லது காசு சம்பாதித்ததால்

கிடைக்கும் ஓய்வு சந்தோஷமா ஓய்ச்சல் ஒழிவில்லாதபடி ஒருவன் ஏன் சம்பாதிக்க வேண்டும். கோடி கோடியாய் சம்பாதித்து ஏன் தூக்கம் வராமல் தவிக்கவேண்டும்.

சிரிக்கவும், பெண்ணோடு சந்தோஷிக்கவும், மதுவைத் தேடி என்ன செய்கிறோம் என்று தெரியாமல் யாரோடு கூடுகிறோம் என்று தெரியாமல் ஏன் ஆடவேண்டும்.

சங்கர நாராயணனை எதிரே உள்ள கட்டிடத்தில் கொண்டு வந்து போட்டார்கள். தம்பி அமெரிக்காவில் இருக்கிறான், அப்பா படுத்த படுக்கையாய் இருக்கிறார். தங்கையும், தங்கை புருஷனும் துபாயில் இருக்கிறார்கள். அம்மாவும் சிலதூரத்து உறவினர்களும் துக்கத்தில் கலங்கிக் கொண்டிருந்தார்கள்.

''அனாதை மாதிரி செத்து போயிருக்கானே... கொள்ளி வைக்க யாருமே இல்லியே'' என்று அழுதார்கள்.

''யார் அனாதை...சங்கர நாராயணனா? அப்படி சொல்லாதீங்க. அவன் என் கையால தோசை சாப்பிட்டான். என் பேரனுக்கு விளையாட்டு சாமான் வாங்கி வந்தான். அவனுக்கு நாங்க இருக்கோம். எம்புள்ளை அவனுக்கு கொள்ளி போடுவான். சங்கர நாராயணன் எனக்கு இன்னொரு புள்ளை''

அம்மா அழுதாள்.

பத்மநாபன் ஈர வேஷ்டியோடு குத்திட்டு உட்கார்ந்து கொண்டான்.

''இறந்து போன என் சகோதரனே, உனக்கு என் நமஸ்காரம் நீ உயிரோடு இருக்கும்போது உன்னைக் கடிந்து பேசியிருந்தாலோ, குறை சொல்லியிருந்தாலோ கேலி செய்திருந்தாலோ துரோகம் இழைத்திருந்தாலோ அவைகளை எல்லாம் மன்னித்து பூதமாக இருக்கிற நீ என்னுடைய பிரார்த்தனைகளை ஏற்று நான் செய்யும் சடங்குகளை அங்கீகரித்து மோட்சத்தை நோக்கி நடக்கின்ற பயணத்தை செவ்வனே நிகழ்த்த வேண்டும்.''



என் அறியாமையால் நான் செய்கிற இந்த சடங்குகளில் ஏதேனும் குற்றம் வந்தால் அவற்றைப் பெரிய மனது பண்ணி மன்னித்து அதிலிருக்கிற அன்பை ஸ்வீகரித்துக் கொள்ள வேண்டும்.

என் ஹிருதயத்திலிருந்து இப்போது பொங்கும் அன்பு தான் உன் வழிப்பயணத்துக்கு தீபம். என் அன்புதான் உன் கை விளக்கு. வைதரணி என்கிற வெந்நீர் நதியை நீ தாண்டுகிற வரை என் அன்பினால் செய்கிற இந்த சடங்குகள் உனக்கு துணை வரட்டும்.

நீ எனக்கு செய்திருக்கிற பல உதவிகளை நினைத்து மிகுந்த அன்போடு இந்த சடங்குகளை என் கடமையாக நான் செய்கிறேன்.

மந்திரம் சொல்லச் சொல்ல பத்மநாபன் அழத் தொடங்கினான். அவன் மனைவி அவனருகில் உட்கார்ந்து அவன் முதுகைத் தடவிக் கொடுத்தாள். அம்மா தலையை வருடினாள்.

காட்டிற்கு போய் ஸ்நேகிதனை எரித்துவிட்டு வீட்டுக்கு வந்து தலை முழுகி உணவுமுடித்து அவன் கட்டிலில் படுத்தபோது சுண்ணைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வந்தது.

''ஹைதராபாதிலேர்ந்து போன் வந்துருக்கு'' அம்மா அறைக்குள் எட்டிப்பார்த்து சொன்னாள்.

மனைவியின் மடியில் தலை வைத்து படுத்திருந்த பத்மநாபன் இருபது விநாடிகள் யோசித்தான்.

''யரரோ ஹாஸ்பிட்டல் டைரக்டராம்.''

''நான் இல்லைன்னு சொல்லிடும்மா''

மனைவியின் வயிற்றில் முகத்தை ஒட்டிக் கொண்டான்.

அம்மா கதவு சாத்திக் கொண்டு ஹாலுக்குப் போனாள்.

''அவர் இல்லீங்க. எப்போ வருவார்னு தெரியாது.'' அம்மா பொய் சொல்லுவது கேட்டது.

மனைவி இடுப்பைச் சுற்றி அவன் அணைத்துக் கொண்டான்.

அனிதா அவன் உடம்பு முழுவதும் தடவிக் கொண்டாள்.

அம்மா கதவு திறந்து உள்ளே வந்தாள்.

''மறுபடியும் அந்தம்மா போன் பண்ணா என்னடா சொல்லணும்?''

''ஹைதராபாத் வர்றதுக்கு வாய்ப்பே இல்லைன்னு சொல்லிடு.''

''ரொம்ப மனசு உடைஞ்சு போயிட்டியா, பத்மநாபா.''

''இல்லம்மா. ரொம்ப தெளிவாயிட்டேன்.''

''மறுபடி ஹைதராபாத் போகணுமா''

''இல்லை. இனிமே மயிலாப்பூர்தான். மவுண்ட் ரோடு ஆபீஸ்தான்.'' தீர்மானமாய் பேசினான்.

மாமியார் எதிரிலேயே அனிதா குனிந்து அவன் கழுத்தில் முத்தம் கொடுத்தாள்.

''அப்பா... இப்பத்தான் எனக்கு நிம்மதி'' என்றாள்.

''நீ போய் பத்து நாள்தான் இருக்கும். இருந்தாலும் இவ ரொம்ப தவிச்சு போயிட்டாடா. உன்னைப் பிரிஞ்சு இவளால் இருக்கவே முடியலை. ஆம்பளை கிளி எங்க ஓடினாலும் பொம்பளைக்கிளி பின்னாலயே தூரத்திண்டு போகுமாம். அப்படி பச்சைக்கிளியா இருக்கா உன் பொண்டாட்டி'' அம்மா கால்மாட்டில் உட்கார்ந்து சிரித்தாள்.

பத்மநாபன் கனவுகளின்றித் தூங்கத் துவங்கினான்.

—முற்றும்—